



தமிழ் உணர்வெழுச்சி மாநாடு!



அன்பிலே ஆளவந்த அழகு!



எம்முள்ளும் உளன் ஒரு பொருநன்

Kazhagamurasu (Tamil Monthly Magazine) - November -2020 E-Book

# கழகமுரசு

ஆசிரியர்: 'சொல்லின் செல்வர்' ஆவடிக்குமார்

தமிழிலக்கியத் திங்கள் மின் இதழ்

நவம்பர் – 2020

விலை ரூ.50



# தரணி போற்றும் தமிழ்நாடு நாள்




# உலகத் தமிழாராய்ச்சி நிறுவன பொன்விழா





உலகத் தமிழாராய்ச்சி நிறுவன பொன்விழா ஆண்டு தொடக்க விழாவை தமிழ் வளர்ச்சி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் க.பாண்டியராஜன் தொடங்கிவைத்தார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன கருத்தரங்குக் கூடத்தில் நடைபெற்ற விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி விளம்பரத் துறை அரசுச் செயலர் மகேசன் காசிநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன், அனைத்திந்திய தமிழ்ச்சங்கத் தலைவர் மற்றும் அம்மா தமிழ்ப்பீடம் நிறுவனர் சொல்லின் செல்வர் ஆவடிக்குமார் உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர்.



# KAZHAGAMURASU

(Tamil - Monthly)

E-Book



**Editor:**
**AVADIKUMAR.**
No.71, Nineth Street, Kamaraj Nagar,
Avadi, Chennai -600071.
e-mail: kazhagamurasueditor@gmail.com
**Call: 99411 74777, WhatsApp: 99412 74777**



**Editorial Board Members:**

Professor, **Dr. V. SRILATHA,** M.A..M.Phil.,PhD.,
e-mail: srilathavenugopal@gmail.com

Professor, **Dr. C. MUTHUMALAI,** M.A.,M.Phil.,PhD.,
e-mail: cmuthumalai23@gmail.com

Professor, **Dr.S. MALLIGA.,** M.A.,M.Phil.,Ph.D.,
e-mail: mallikasubramanian1212@gmail.com

Professor, **Dr.A. VIJAYARANI** M.A.,M.Phil.,Ph.D.,
e-mail: vijayaranigvss@gmail.com

Professor, **Dr.M. GOVINTHARAJALU** M.A.,M.Phil.,Ph.D.,
e-mail: govindarajulum76@gmail.com

Kavimamani **"Citruli" R. RAM GANESH**
M.A.,M.Ed.,M.Phil., S. M. E.
e-mail: rganash.phd@gmail.com

"Kavimamani" **Nellai G. SOMASUNDARI**
M.Sc.,B.Ed.,M.A.,M.Phil., S. M. E.
e-mail: gsomas30@gmail.com

Professor, **Dr. B.VAIDURIAMMAL**
M.A.(T), M.A.(Soc), M.Phil.,Ph.D.,, Dip in Telugu
e-mail: bvaiduma@gmail.com

Professor, **Dr. TAMIZHARASI KOTHAIMARBAN,**
M.A.,M.Phil.,Ph.D.,
e-mail: tamizhkothai@redeftamil.com

Professor, **Dr. M. SELVI,** M.A.,M.Phil., Ph.D.,
e-mail: selvichellappa1975@gmail.com

Professor, **Dr.V. SARALA ARUMUGAM,**
M.A.,M.Phil., Ph.D.,
e-mail: vsaralao@gmail.com

Professor, **Dr. N. DHANALAKSHMI,**
M.A.,M.Phil., Ph.D.,
e-mail: dhanasathiya2729@gmail.com

Professor, **Dr. S.G. ESTHER ARUL MARY,**
M.A.,M.Ed.,M.Phil., Ph.D.,
e-mail: sgesther03@yahoo.com

**Manager:**
Advocate **A. K. NIRAIMATHI,** M.A.,B.L.,
e-mail: nirainila03@gmail.com

**Designer:**
**V. IYAMPERUMAL,**
e-mail: yesviperumal@gmail.com



**Publisher:**
**AVADIKUMAR. M**

**Place of publication:**
No.71, Ninth Street, Kamaraj Nagar,
Avadi, Chennai - 600071.
Thiruvallur District, Tamil Nadu.
e-mail: kazhagamurasu@gmail.com
Kazhakamurasu@gma il.com

**Website:**
https://www.kazhagamurasu.in



# கழகமுரசு

ஆசிரியர்: 'சொல்லின் செல்வர்' ஆவடிக்குமார்

முழக்கம் –3 நவம்பர் – 2020


# தமிழ்க்குடிகளின் கீழடி..

தமிழ்க் குடிகளின் பெரும்புகழை மீட்டுருவாக்கம் செய்யும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற வரலாற்றுப் பெருமை நமக்குக் கிடைத்திருக்கிறது.

இந்தியாவின் தொன்மை நாகரீகம் என்பது சிந்து சமவெளி, மொகஞ் சதாரோ ஹரப்பா என்று எழுதிக் கொண்டிருந்த வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துக்களைப் பின்னுக்குத் தள்ளும் முடிவுகள் கீழடியில் கிடைத்திருக்கின்றன.

இனி.... இந்திய வரலாறு, இது கீழடி மண் தோண்டாக் காலத்து முன் தோன்றியது என்று அடிக்கோடிட்டு அறிவிக்க வேண்டிய அவசிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மிகச் சிறப்பாக செய்துவரும் அகழ்வாய்வுப் பணிகளின் தொடர்ச்சியாக... தோண்டத் தோண்ட தொல்பொருள் புதையல் கிடைத்து வருகின்றது. அதன் அடிப்படையில் தமிழ் குடிகளின் கீழடியில் கிடைத்த வைகைக்கரை நாகரீகம் 2,600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

அள்ள அள்ள குறையாத அபூர்வ நாகரீகச் சுவடுகளாக வெளிப்பட்டுவரும் ஆவணங்களை எல்லாம் பத்திரப்படுத்தி உலகத்தின் பார்வைக்கு வைக்க உலகத் தரத்தில் கீழடி அகழ்வைப்பகம் உருவாக்கும் சரித்திர சாதனையை தமிழ்நாடு அரசு செய்திருக்கிறது.


கீழடியில் ஐந்து கட்ட அகழ்வாய்வுகள் முடிந்த நிலையில் பிப்ரவரி மாதம் 19 ஆம் தேதி தொடங்கிய ஆறாவது கட்ட அகழ்வாய்வு செப்டம்பர் மாதம் 30ஆம் தேதியுடன் முடிவடைந்துள்ளது. அரிய பொருட்களை அள்ளித் தந்திருக்கும் ஆறாம் கட்ட அகழ்வாய்வு கீழடி மட்டுமின்றி அதனைச் சுற்றியுள்ள அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய கிராமங்களிலும் நடைபெற்றுள்ளது.

அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் அதனை எடுத்த குழிகள் உள்ளிட்டவற்றை ஆவணப்படுத்தும் பணிகளை தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை கவனமாக மேற்கொண்டு வருகிறது. கீழடி அகழ்வாய்வில் கிடைத்தப் பொருட்களின் மாதிரிகள் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள மியாமி நகரின் "பீட்டா அனாலிடிக்" என்ற ஆய்வு நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டு அங்குப் பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பிறகு கிடைக்கும் முடிவுகள் அடிப்படையில் எந்தக் காலத்தை சேர்ந்தது என்று உறுதி செய்யப்படுகிறது.

அதனால், உலகம் தமிழ் குடிகளின் தொன்மை சிறப்பை ஏற்றுக்கொள்ளும் நிலை வந்துள்ளது. உலகத்தின் பார்வையைத் தன் பக்கம் திருப்பி இருக்கும் தமிழ் கீழடியில், ஏழாவது கட்ட அகழ்வாய்வுக்கு இந்திய தொல்லியல் துறையின் அனுமதியைப் பெற்றுவிட்ட பெருமிதத்தோடு தமிழ்நாடு அரசு தயாராகி வருவதை அறிந்து தமிழ் கூறும் நல்லுலகம் புளகாங்கிதம் அடைகிறது.

தமிழ்க்குடிகளின் தொன்மைச் சிறப்பைக் கண்டெடுத்து, கீழடியை உலகறியச் செய்த அரும்பணிக்காக, தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி கே பழனிசாமி அவர்களையும். தமிழ் வளர்ச்சி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் பாண்டியராஜன் அவர்களையும், கழகமுரசு வழியாக அனைத்திந்திய தமிழ்ச்சங்கம் பாராட்டுகிறது....!

நல்லார்க்கினிய,



(ஆவடிக்குமார்)



“ஏதுமற்றவர்களுக்குப்
பசி தீர்க்கும் அருமருந்து
தண்ணீர் தானே...
செல்லம்மாவின் பசிக்கும்
தண்ணீரே காலை
உணவானது...!”

# இவள் ஒரு திருமதி

3

(ஒரு நிஜத்தின் நிழல்)

"சொல்லின் செல்வர்" ஆவடிக்குமார்



**எங்கம்மா இருக்கே...! சாப்பிட்டியா...! செல்பேசியில் இருந்த குறுஞ் செய்தியைப் பார்த்தவுடன் தான் காலையில் இருந்து எதுவும் சாப்பிடவில்லை என்ற நினைவு வந்தது. கடமை... கடமை என்று ஓடிக்கொண்டிருக்கும் செல்லம்மா தன்னைப் போலவே எதையும் எதிர்பார்க்காமல் தன் பணியை நிறுத்தாமல் செய்து கொண் டிருக்கும் தன் கடிகாரத்தைப் பார்த்தாள்... மணி 9.28 என்றது. சரியாக 9.30 க்கு வகுப்பறைக்குள் இருக்க வேண்டும்... இனி சாப்பிடுவதெங்கே...?**

ஏதுமற்றவர்களுக்குப் பசி தீர்க்கும் அருமருந்து தண்ணீர் தானே... செல்லம்மாவின் பசிக்கும் தண்ணீரே காலை உணவானது...!

வகுப்பறைக்குள் நுழைந்தாள். அந்தப் பள்ளியின் சிறப்பம்சம் என்னவென்றால் மாணவர்களுக்கு மட்டும் தான் உட்கார இடம் இருக்கும். பாடம் எடுக்கும் ஆசிரியர் நின்று கொண்டு தான் இயங்க வேண்டும் என்பதால் இருக்கைப் தரப்படுவதில்லை.

மாறி மாறி மூன்று மணிநேரம் இடைவெளி இல்லாமல் வகுப்புகள் எடுத்து முடித்து விட்டு... உணவுப் பெட்டியை தூக்கிக் கொண்டு ஓய்வு அறைக்கு வந்த போது அங்கும் ஏமாற்றம். குறைவான இருக்கை உள்ள அந்த சிறிய அறைக்குள் இருந்த இருக்கைகளில் எல்லாம் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்

அதோ அந்த மூலையில் ஒரு இடம் இருக்கிறது அதில் அமரலாம் என்று நகர முனைந்த



போது... மேம்... நான் வகுப்பெடுக்கபோகணும்டைம் ஆயிடுச்சி... உங்களுக்கு இந்தப் பீரியட் ரெஸ்ட்தானே நான் சாப்பிட்டுக்கவா...? என்ற சகோதர ஆசிரியையின் அவசரத்துக்கு இணங்கி விலகினாள்.

உண்மையில்... செல்லம்மாவுக்கு சாப்பாடு கூட முக்கியமில்லை. சிறிது நேரம் உட்கார இடம் கிடைத்தால் அதுவே போதும் என்றிருந்தது. ஆனாலும் பெறுவதற்கு மேலும் 15 நிமிடங்கள் நிற்க வேண்டி வந்தது.

ஒரு வழியாக இடம் கிடைத்து சாப்பிட உட்கார்ந்த போது தலை சுற்றுவது போலவும்... உலகமே தன்னை வேட்டையாடுவது போலவும்... இனம் புரியாத தாக்கத்தில் தவித்தவளை... வேகமாக சுழன்ற ஃபேனில் இருந்து வந்த காற்று ஆசுவாசப் படுத்தியது.

சில நிமிடங்களில் நிலைக்கு வந்தவளாக சாப்பிட டிபன் பாக்ஸ் திறந்தாள். காலையில் கெட்டி தயிரை கொட்டித் தயாரித்த தயிர் சாதம் வெண்மையை வாறியிரைத்த படி, தளதளவென சிரித்தது. அதை ரசித்து ருசிக்க கைவைத்தாள்.

செல்லம்மா..! சாப்பிடுமா..! நான் இருக்கேன்..! என்ற ஆறுதல் மொழிந்தவாறு அவளின் பைத்தியக்காரன் சிரித்தான். இவர் எப்படி டிபன் பாக்ஸ் தயிர் சாதத்தில் இருக்க முடியும் என்று அப்பாவி தனமாக நினைத்துக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தாள். என்ன தான் படித்தவர்களாக இருந்தாலும் மனம் ஒன்றை நாடும் போது மூட நம்பிக்கைகள் கூட வந்து சிந்தனை யைத் திசைதிருப்பும் போலும்

அவன் டிபன் பாக்ஸில் இல்லை... அவள் இதயத்தில் இருக்கிறான்... அவனை மறப்பதாக கருதிக் கொண்டு அவனையே நினைத்துக் கொண்டிருப்பதால்.. பார்க்கும் இடம் எல்லாம் அவனாகத் தெரியும் உளவியலை செல்லம்மா உணராதவளா என்ன...?

அவன் மீது வெறுப்போ... கோபமோ.. அவளுக்கு இல்லை. இன்னும் பார்த்தோம் என்றால் அவனை அவள் நேசிக்கவே செய்கிறாள்... அவனிடம் அதை காட்டிக் கொள் வதில்லை. அவன் முகம் தெரிந்ததால் தானோ என்னவோ தயிர்சாதத்தை மிச்சம் இல்லாமல் சாப்பிட்டு முடித்தாள்.

கைகழுவி துடைத்துக் கொண்ட செல்லம்மா வால் மனதில் ஓயாமல் ஓங்கி ஒலிக்கும் ஓசைகளைக் கைகழுவ முடியவில்லை. தனக்கு அடுத்த வகுப்பு இன்னும் அரை மணி நேரம் கழித்து தான் அதுவரை.... பாட சிலபஸ் பார்த்து குறிப்பெடுக்க நினைத்து புத்தகத்தை எடுத்தாள்... எப்போதும் தன் பணிகளை நிறைவாகவும், முழு ஈடுபாட்டோடும் செய்வதில் செல்லம்மாவுக்கு நிகர் செல்லம்மாதான்...

**“ கைகழுவி துடைத்துக் கொண்ட செல்லம்மாவால் மனதில் ஓயாமல் ஓங்கி ஒலிக்கும் ஓசைகளைக் கைகழுவ முடியவில்லை. ”**

தனக்கு என்ன தான் துன்பம், துயரம், வேதனை இருந்தாலும் அதை அப்படியே முழுங்கிக் கொண்டு மற்றவர்களுக்கு சிறு ஐயம் கூட தோன்றாத வகையில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிதருபவள்.

அதனால் தான் செல்லம்மாவைப் பார்க்கும் எல்லோரும் அவளுக்கென்ன கவலையில்லாத நிம்மதியான வாழ்க்கை என்று கருது கிறார்கள்.

அதுமட்டுமல்ல தனக்கு எந்தப்

பாதிப்பு என்றாலும் அதை தன்னந்தனியாக தானே எதிர் கொள்ளும் நெஞ்சுரம் மிகுந்தவள். பிடிவாதக்காரி. பிடித்த முயலுக்கு மூன்று கால் தான் என்று சாதிப்பாள். அதனாலேயே செல்லம்மாவைப் பற்றி தெரியாதவர்கள் அகம்பாவம் பிடித்தவள்.. படித்திருக்கிறோம் என்ற திமிர் பிடித்தவள் என்பார்கள்.

பாடக் குறிப்பெடுக்க முயன்ற செல்லம்மா மன சஞ்சலத்தால் செய்ய இயலவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தாள்... அறையில் அவளைத் தவிர வேறு யாரும் இல்லை. அணைத்து வைத்திருந்த தன் செல்போனை ஆன் செய்தாள்.

காத்திருந்த குறுஞ்செய்திகள் கண்ணில் பட்டன. "செல்லம்மா பள்ளிக்கூட வாசலில் காத்திருப்பேன். நீ வந்தவுடன் கோயிலுக்குப் போக வேண்டும். அங்கு ஏழைப் பெண்களுக்கு உன் கையினால் புடவை வழங்க வேண்டும். என் செல்லம்மாவின் பிறந்த நாளுக்கு நான் செய்துள்ள ஏற்பாடு"

என் மீது வருத்தம் இருந்தால் என்னைத் திட்டு, தண்டனை கொடு ஏற்றுக் கொள்கிறேன். அதற்காக வராமல் தவிர்த்து விடாதே..!

செல்லம்மாவின் மனம் நிலையில்லாமல் பதற்றமடைந்தது. இந்த பைத்தியக்காரர் ஏன் இதையெல்லாம் நம்மைக் கேட்காமல் செய்கிறார். எப்படிப் போக முடியும் மாலை சீக்கிரம் வீட்டுக்குப் போக வேண்டும். பள்ளியில் இருந்து குழந்தை இளமதியை வீட்டுக்கு அழைத்து வந்து தனியே விட்டு விட்டு ஜெயன் போய்விடுவாரே... குழந்தை தனியாகத் தவிக்குமே...!

குழந்தையைக் கஷ்டப்படுத்திவிட்டு நமக்கென்ன பிறந்த நாள் .. கோயில்... கொண்டாட்டம். வீட்டுக்குப் போய் குழந்தையையும் அழைத்துக் கொண்டு வரலாம் என்றால் அதுவும் முடியாது

ஜெயனிடம் அனுமதி வாங்காமல் குழந்தையைக் கூட்டிப்போனால் வீட்டில் பிரளயம் ஏற்படும். என்ன செய்வது என்று உறுதிப்படுத்த முடியாமல் குழப்பத்திலேயே ஓய்வு நேரம் போனது.

அதையெல்லாம் அப்படியே தூக்கி போட்டுவிட்டு தன் கடமையைத் தொடர வகுப்பறைக்குள் புகுந்தாள்....!

பள்ளியில் பணி முடிந்தவுடன் செல்லம்மா போகப் போவது குழந்தையிடமா...? கோயிலுக்கா...? இரண்டில் எது... !..?

(தொடர்வாள்...!)

# திருமண வாழ்த்து



அனைத்திந்திய தமிழ்ச்சங்க செங்கல்பட்டு மாவட்ட அமைப்பாளர் நந்திவரம், கூடுவாஞ்சேரி க. வெங்கடேசன் அவர்களின் இளைய மகன் வெ.கார்த்திகேயன் குணநந்தினி திருமணம் சென்னை, பழைய பல்லாவரம் ப்ரீத்தி திருமண மண்டபத்தில் நடைபெற்ற போது அம்மா தமிழ்ப்பீடம் நிறுவனர் மற்றும் அனைத்திந்திய தமிழ்ச்சங்கத் தலைவர் "சொல்லின் செல்வர்" ஆவடிக்குமார் கலந்துக் கொண்டு வாழ்த்தி மகிழ்ந்தார்.

# தூங்கும் கலைகள்... ஏங்கும் விழிகள்...!

முடிவில்லாத கனவுகளைக் கொண்ட நான் [அத்யந்த காமன்] இங்கே ஒரு கோவிலை என் மக்களுக்காக எழுப்புகின்றேன் !

**அங்கே சிவனும், உமையும் உறைந் திருக்கட்டும்!**

**ஆஹா,,,,! என்னவொரு அற்புதமான சொல்லாட்சி ! ஆம் !**

எல்லோரும் இறைவனுக்காகத் கோவில் எழுப்பினேன் என்று சொல்லிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில், மக்களுக்காக எழுப்பினேன் என்றதும்,,

மக்களுக்காக,,, மக்களால் ஆளுவதே ஆட்சி ! என்பதுவும்,, அதுதான்,, மாட்சிமைத் தரும்,, என்பதுவும்,, ஆறாம் நூற்றாண்டு காலத் திலிருந்து வழங்கி வருகிற சொல்லாட்சிதான் !

அப்படிச் சொன்னது அத்யந்தகாமன் என்னும் இரண்டாம் நரசிம்மவர்மன் என்கிற ராஜசிம்ம பல்லவன் !

அதுவரை !

மண்ணிலும், செங்கல்லிலும், மரத்திலும், கோவில்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்க,,

"நான் தான் முதலில் கல்லிலே கட்டத் தொடங்கினேன் ! " என்று மகேந்திரவர்ம பல்லவர் சொல்லித் தொடங்கியவைதான் , தொண்டை மண்டலத்தில் கற்கோவில்களின் ஆரம்பம் ,

முதலாம் நரசிம்ம வர்மன் என்றும், மாமல்லன் என்றும் , அழைக்கப்பட்ட மன்னனின் பெயரால் மாமல்லபுரம் என்றழைக்கப்படுகிற அழகுமிகு கலை நகரத்தில் , குடைவரைக் கோவில்களாகவும், கற்றளிகளாகவும், ஒற்றைக் கல் ரதங்களாகவும்,, உருமாறி,, நம் கண்களுக்கு விருந்தளித்துக் கொண்டிருக்கிற மாமல்லபுரத்தின் கலைக் கோவில் ஒன்றினை நோக்கியே,,, இன்றைய நம் ஏங்கும் விழிகள் ,,,,,, பயணிக்கிறது !

இன்றைய மாமல்லபுரம் !

சங்ககாலத்தில் நீர்பெயற்று என்ற பெயரில் அழைக்கபட்ட நகரம், பின்னர் மல்லை , மல்லேறு , கடல் மல்லை என்கிற ஒரு துறைமுக நகராக இருந்தது !

ஆம்,,,! அதனை

**புலங்கொள் நிதிக்குவை யோடு**
**புழைக் கைம்மா களிற்றி னமும்**
**நலங்கொள் நவமணிக் குவையும்**
**சுமந்து எங்கும் நான்று ஒசிந்து**
**கலங்கள் இயங்கும் மல்லைக்**
**கடல் மல்லைத் தல சயனம்**
**வலங்கொள் மனத்தார் அவரை**
**வலங்கொள் என் மட நெஞ்சே**

என்று பாடுகிறார் திருமங்கை ஆழ்வார் !

கடல் மல்லையில்,,காணும் இடமெல்லாம்,,,



கலைக்கோவில்கள் தான் ! கற்கோவில்கள்தான்!

சைவமும், வைணவமும், இணைந்த கடற்கரைக்கோவில் !

பஞ்ச பாண்டவர் இரதங்கள் எனும்,, ஒற்றைக் கற்றளிகள்

அர்ஜீனன் தவம், பகீரதன் தவம், இமய மலையின், விலங்குகள், தெய்வங்கள், யானை களின் அணிவகுப்புக் காட்சியென ஒற்றைப் பாறையில் செதுக்கிய அற்புதங்கள்!

முல்லை நிலக் காட்சி சொல்கிற கிருக்ஷ்ண மண்டபம் !

கணேசரதம்,துர்க்கைஆலயம், வெண்ணெய் கல் உருண்டை, மகிஷாசுரமர்த்தினி குடைவறைக் கோவில், ராயர் மண்டபம்,,, அற்புதங்கள் அத் தனையும், பல்லவர் பூமியில்,,,, !

கடல்மல்லையில்,,,,,!

எதைப் பார்க்க,,,,?

எதனை விட,,,,?

குழந்தையின் கைநிறைய இனிப்பு மிட்டாய்களைக் கொடுத்து விட்டு,,

எந்த இனிப்பு மிட்டாய் பிடிக்குமெனக் கேட்டால்,,,,?

அத்தனையும்,, தான் பிடிக்குமெனச் சொல்லும்,,,!

ஆனாலும்,,,

அதற்குப் பிடித்தமான,,,

ஓர் இனிப்பினைத்தான் முதலில் சாப்பிட ஆரம்பிக்கும்,,,!

> **சங்ககாலத்தில் நீர்பெயற்று என்ற பெயரில் அழைக்கபட்ட நகரம், பின்னர் மல்லை , மல்லேறு , கடல் மல்லை என்கிற ஒரு துறைமுக நகராக இருந்தது !**

இதுதான் நிதர்சனம் ! இனி,,,,

கல்லெல்லாம் கலையாகக் கண்ட பல்லவர்கள் கோட்டத்தில்,,,,

வராக மண்டபத்தில் ஓங்கி உலகளக்கின்ற திரிவிக்கிரம சிற்பத்தினை நீங்கள் பார்த்திருக் கிறீர்களா ?

அவரை அறிவீர்களா ?

மகாபலி என்னும் மன்னன் இந்திர பதவி வேண்டி யாகம் ஒன்று நடத்துகின்றான் !

யாகம் நிறைவுற்றால்,,,அசுர குலமன்னனான மகாபலிக்கு இந்திர பதவி கிடைத்து விடும் ! இந்திரன் உட்பட தேவர்கள் அனைவரும், யாகத்தினைத் தடுத்து நிறுத்த வேண்டி,,, மகாவிக்ஷ்ணுவை வேண்டுகின்றனர் !

யாகம் நடைபெறுகிறது !

யாகம் நிறைவுறும் நேரத்தில்,,, வந்தவர்கள் என்ன கேட்டாலும்,, கொடுக்க வேண்டுமென்பது இயல்பான முறை! விதி !

வந்தவர்கள் கோ [மன்னன்] விடம்,

கோ [பசு] கேட்டார்கள் ? கொடுத்தான் !

ஆடு மாடுகள் கேட்டார்கள் ? கொடுத்தான்!

பொன் கேட்டார்கள் ? ,,,, கொடுத்தான்,,,,!

பொருள் கேட்டார்கள்,,? கொடுத்தான் !

மகாவிக்ஷ்ணு வாமன உருவம் என்கிற





நிறைவில் இருக்கும் நிலையில்,,,,

அரண்மனை வேண்டும், அத்தாணிப் பொன் வேண்டும் ! என்றெல்லாம் கேட்காமல்,,?

மூ ன் ற டி ம ண் கேட்கிறாயே ? என்கிற ஏளன விழிப்பார்வையோடு,,

மூன்றடி மண் தானே ? தந்தேன் ! என்கிறார்,, மாமன்னர் மகாபலி !

ச ட் டெ ன் று பொ றி த் தட்டுகிறது !

அசுரகுரு சுக்ராச்சாரியாருக்கு !

இல்லை,,,! வந்திருப்பவன் வாமனன் என்கிற குள்ளச் சிறுவன் இல்லை,,, ! இதன் பின்னால்,,, ஏதோவொரு பயங்கர நிகழ்விருக்கிறது ! தடுப்போம்,,,!

குள்ளமான சிறுவனின் உருக்கொண்டு, கையில் தாழங்குடையுடன் மகாபலி யாகம் செய்கிற இடத்திற்கு வருகின்றார் !

யாரிவன் !

இவனைப் பார்த்தால்,, பிரச்சனைக்குரியவன் போல இருக்கின்றானே ?

இவனை உள்ளே விடலாமா ?

மகாபலியின் தளபதியான நமுசி என்பவன் தடுக்கின்றான் !

அவனைச் சிரித்தபடி, உதைத்துப் புறந்தள்ளி நடக்கின்றான் ! வாமனன்.

பார்ப்பவர் கண்கள் மயங்க,,

அழகாய் நடந்து வருகின்ற வாமனனைக் கண்டு வியக்கின்றான் ! மகாபலி !

வாரும் பிள்ளாய் !

வேண்டுவன கேளும் பிள்ளாய் ! என்கின்றார் மகாபலி.

மூன்றடி மண் வேண்டும் ! என்கின்றான் வாமனன்.

மூன்றடி,,,!

மூன்றடி மண் ?

சிரிப்பு வருகிறது ! மகாபலி மன்னனுக்கு,,,,

ஒற்றைப் பசு வேண்டும் என்றவர்களெல்லாம், யாகம் நடத்துகையில் வந்து கேட்டால்,, பெரும் பசுக் கூட்டத்தையே மன்னர் தருவார் என,

யாகம் நடத்தும், நாளுக்காய்க் காத்திருக்கும், வேளையில்,,,,

அப்படியே பொன்னுக்கும், பொருளுக் கும், வந்தவர்கள் எல்லாம் காத்திருக்கும் நேரத்தில், வந்தவர்களுக்கெல்லாம் அள்ளியள்ளிக் கொடுத்த

வேண்டாம் மகாபலி ! வேண்டாம்,,,!

மூன்றடி மண் கொடுக்காதே ? பிழை செய் கிறாய் ! நில்லென்கிறார் ! தடுக்கிறார் குலகுரு சுக்ராச்சாரியார்.

அத்தனைப் பேருக்கும் கொடுத்தேன் !

இதோ,,,,,, இந்த சிறுவனுக்குக் கொடுக்கும்,, போதா ? தடுப்பது,,,,?

குலகுருவின் சொல்லைப் புறந்தள்ளுகிறார் ! மகாபலி மன்னர் .

மூன்றடி மண் தந்தேன் ! என்றீர்கள்,,,,, ?

ஆனால்,,,,

இன்னும் தாரை வார்த்துக் கொடுக்கவில்லை,, மன்னா !

தாழங்குடையினைக் கையில் வைத்தபடியே,,

புன்னகை மாறாமல் கேட்கிறான் ! குள்ளச் சிறுவன் வாமனன் .!

இதோ !

நீர் கொண்டு தாரை வார்த்துக் கொடுக்க,, கெண்டியினை எடுக்கிறார் ! மன்னர்.

நீரேந்தி தாரை வார்த்து மூன்றடி மண் பெற கை நீட்டுகிறான் ! வாமனன் .

நீர் விழுந்தால்,,,? ,,மன்னனே

நீ அழிந்து போவாயடா ! எப்படியேனும், உன்னைக் காப்பேனென வண்டாக உருமாறி கெண்டியின் மூக்கு வளைவில் அமர்ந்து நீர் விழும் வழியினை அடைக்கிறார் ! குலகுரு.

எல்லாம் அறிந்த ,

பொல்லாச்சிறுவன் ! தர்ப்பைப் புல்லொன்று எடுத்து கெண்டியின் மூக்குத்துளையினில் விடுகிறான் ! குரு சுக்ராச்சாரியின் கண்கள் ஊனமாகிறது ! வண்டு விலகிப் பறக்கிறது !

அதே நேரம் நீரும் விழுகிறது !

நீர் விழுந்த நேரம்,,,!

வாமனன் விண்ணுக்கும், மண்ணுக்குமாக எழுகின்றான் !

திரிவிக்கிரமனாய்,,,,, !

ஓரடி அளந்தான்! நிலவுலகம் சரியாகிற்று!

இரண்டாம் அடி அளக்க கால் தூக்கினான்! நிலாவுலகமும் சரியாகிற்று!

[இந்தக் கணம் தான் கடல் மல்லையின் சிலையாகிற்று ! ]

மூன்றாம் அடி அளக்க வேண்டும்!

என் தலை!

என் தலையே உங்கள் மூன்றாம் அடி என்று தலை கொடுத்தான்! மகாபலி .

மூன்றாம் அடியும் அளந்தான் !

வாமனன் திரிவிக்கிரமன் ஆன கதை இதுதான் !

இக்கதைதான் !

கடவுளின் தேசமென்கிற கேரளமக்களின் திருவோணம் பண்டிகை நாள், கதையும். இதுவே தான்..

இந்தத் திரிவிக்கிரமனை,

**"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி**
**நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்**
**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து**
**ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடுகயல் உகளப்**
**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி**
**வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்ப சுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்!"**

என்று வணங்குகிறாள் ! திருப்பாவையில் சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாளான கோதை நாச்சியார் !

காதால் அல்லவா ? கதை கேட்டோம் !

கண்ணால் பார்க்க வேண்டாமா ?

இதோ,,,,

மாமல்லை என்கிற மாமல்லபுரத்தின் அர்ஜுனன் தபசு சிற்பத் தொகுதியினைத் தாண்டிச் செல்கையில், கண்ணனின் வெண்ணெய்க்கல் நோக்கிச் செல்லும் பாதையில் கணேச ரதம், என்கிற ஒற்றைக் கற்றளி நம் கண்ணில் படுகிறது !

கணேச ரதத்தின் இடது புறம் செல்லும் வழியில் வராக மண்டபக் குடைவரை கண்ணில் படுகிறது !

குடைவரையின் முகப்பு கபோதங்களெனும் அமைப்புடன் கூடியதாக,, ஒற்றை வரிசையில் இரு சிம்மயாழித் தூண்களுடன் அமைந்திருக்கிறது !

தூண்களின் இரு சிம்மயாழிகளும்,,நம்மை வர வேற்கத்தான் காலகாலமாகக் காத்திருக்கிறதோ?

குடைவரையின் ஓரத்தின் இரு பக்கங்களிலும் இரு அரைத்தூண்கள் ! அவைகளும் மண்டபத்தின் உள்நேர்ப் பார்வை பார்க்கின்ற சிம்மயாழிகளுடன் காட்சியளிக்கின்றன !

குடைவரையின் ஓரத்தின் இரு பக்கங்களிலும் இரு அரைத்தூண்கள் ! அவைகளும் மண்டபத்தின் உள்நேர்ப் பார்வை பார்க்கின்ற சிம்மயாழிகளுடன் காட்சி யளிக்கின்றன !

மண்டபத்தின் உள்ளே விழிகள் பதிய,,,,

வடக்குப் பக்க சுவற்றில் தென் திசை பார்த்த படி இரணியாட்சன் எனும் அரக்கன் கடலுள் மறைத்த பூமாதேவியை மீட்டு தன் மடியிருத்திக் காட்சி தரும் வராகர் சிற்பத்தொகுதி ! பேரழகு !

அதையொட்டிய மேற்கு சுவரில் இலக்குமி யானைகளுடன் காட்சி தரும் புடைப்புச் சிற்பத் தொகுதி ! திருமகளின் ஆடைகளும், அவர்தம் தோழியரின் பாங்கும், யானைகளின் அழகும்,,,பார்த்த விழிகள் மலைக்கின்றன !

அடுத்து மண்டபத்தின் உட்புறச்சுவரி லிருந்து துருத்திய வண்ணம் கருவறை போன்ற அமைப்பில் கோவிலொன்று ! அதன் இருபுறமும் அழகிய துவாரபாலகர்கள் !

அதனையடுத்து கொற்றவை ! துர்க்கை எனும் வீரத்தின் விளைநிலமானவள் !

அவளின் அருகில், இருபுறமும், சிம்மமும், கலைமானும் பாய்கின்றன! தலை கொய்தும் சமர்ப்பிக்கும் வீரன் ! பூத கணங்கள் ! என அழ கென்றால்,, அத்தனை அழகு !

மெல்லத் திரும்புகின்றோம் !

தென் திசைச் சுவற்றினை நோக்கி,,,,,,

"தோள் கண்டார் ! தோளே கண்டார் ! " என கவிச்சக்கரவர்த்தி கம்பன் தன் இராமகாதை யில் சீதை, ராமனின் சந்திப்பினைச் சொல்லி



நீங்கள் விலகிவிடாதிருங்கள் ! அங்கேயே நில்லுங்கள் ! என்னும் வண்ணம் வானினைத் தாங்கிப் பிடித்திருக்கிறார் !

[ நான் வானமளக்கப் போகிறேன் என்றவுடன்,, என் மேலேயே சரிந்து விடப்போகிறீர்கள் என்றபடி,, முன் ஜாக்கிரதையாகத் வலதுகை ஒன்றினால் தாங்கியும் பிடித்திருக்கலாம் ]

மற்ற மூன்று வலது கைகளில் உருவிய வாளும், கதாயுதமும், ஏவும் நிலையில் சக்கரமும் தாங்கியிருக்கிறார்.

யிருப்பார் !

ஆம் ! பொய்யில்லை,,, என்பது,,,

இந்த திருவிக்கிரமனைப் நோக்கும் போது,,,நமக்கும் புரியும்,,!

ஓங்கி உலகளந்த உத்தமன் ! என்று கோதை நாச்சியார் பாடியதும்,,

மகாபலி கதை படித்ததும்,

நம் விழி முன்னால் விரிகிறது !

வாமனனாய் வந்த பிள்ளை ?

திரிவிக்கிரமனாய் மாறி விட்டான் !

ஓரடி அளந்த மண்ணுலகில்,

தன் வலக்காலினை அழுந்த ஊன்றியபடி,,,,,,

இரண்டாம் அடிக்காக,,,, தன் இடக்காலினை நீட்டுகின்றான் !

வான் தொடப்போகிறது !

உலகளந்த பெருமாளின் திருக்கால்,,, அவனின் தோளினைத் தாண்டியும் நீள்கிறது !

எண்திசைகளுக்கும்,, தெய்வமானவனின்,,,

எட்டுக்கரங்களில் இடது கரமொன்று,,,

என் காலடி போகின்ற திசையினைப் பார் ! மகாபலி !

என்று சொல்லும் வண்ணம், கால் போகும் திசை காட்டுகிறது !

மற்ற மூன்று இடது கரங்களில், வில்லும், கேடயமும், சங்கும் தாங்கியிருக்கின்றார்.

வலது நான்கு கைகளில் ஒன்று !

வானமளக்கப் போகிறேன் !

ஆதலின்,,,,,,,,, வானகமே !

ஒரு கற்சுவற்றின் நடுப்பகுதியின் பேரிடத் தினை ஓங்கி உலகளந்த உத்தமனின் பேருருவம் நிலை கொண்டிருக்க,,,,,,

அவன் காலடியில்,,, நால்வர்,,,!

என்னடா ? இது !

என்ன நடக்கிறது ? இங்கே,,,,?

சற்று நேரத்திற்கு முன் ,

தாழங்குடை பிடித்தபடி ஒரு குள்ளச்சிறுவன் வந்தான் !

மூன்றடி நிலம் கேட்டான்!

நீர் வார்த்துக் கொடுத்தேன்,,,!

சிறுவன் மறைந்து விட்டான்,,,,,,!

வேறொருவன் பேருரு கொண்டு நிற்கின்றான்!

என்ன இது மாயம்,,,?

இவர் தான் திரிவிக்கிரமனோ ?

எவர் செய்த மாயம் இது ?

மன்னர் மகாபலி திகைத்துப் போய் இருக்கின்றார் !

யாரடா ?

நீ மாயக்காரனோ ? உன்னை, உம்மை வாளெடுத்து தாக்கலாமென்றுதான் எண்ணுகிறேன் ! ஆனால்,,,எம் மன்னர் மகாபலியே திகைத்துக் கிடக்கையில்,, இனி நானென்ன செய்வது ? என்றபடி ஒரு அசுரன் தன் வாளின் கைப்பிடியில் வைத்த கை எடுக்காமல் திகைத்திருக்கின்றான் !

மண் அளந்தீர் ! மாதவா !

விண் அளக்கப் போகின்றீர் ! மாலவா !

உன் கதாயுதத்தின் முழு எடையினையும் , தாங்கும் சக்தி இல்லையெனினும், கொஞ்சம்

தோள் கொடுக்கின்றேன் ! உம் பணியில்,, நானும் இருக்கின்றேன் என்னும் வண்ணம் பரமனின் வலப்புறத்தில் வட்டத் திகிரி சுற்ற சூரியனும் ,பறக்கின்றான் !

அய்யனே ! சூரியனின் சக்தி பெரிது !

அவன் கதாயுதம் தாங்கத் தோள் கொடுக்கின்றான் !

நான் சந்திரன்,,,!

உம் கேடயம் தாங்கும் கரம் பற்றிக் கொள்கின்றேன் !

என்னையும் காத்தருளும் என்னும் வண்ணம்! சந்திரன், பரமனின் இடது புறம் வட்டக் குளிர் நிலா சுற்ற பறக்கின்றான் !

கேடயக் கரங்களின் இடப்புறம்,,,,

பறக்கும் சந்திரனையும், தாண்டி,,,, யாரது,,,,?

தலைகீழாய்த் தொங்குகின்றான் ?

யாரிவன்,,,,?

அட,,,,,!

வாமனன் ! இவன் விவகார மானவன் என்று மகாபலி மன்னரின் , யாக மண்டபத்தின் வாசலில் தடுத்தானே ?

நமுசி எனும் அரக்கன் ! அவனல்லவா ? இவன்,,

ஆம் ! அவன் தான்,,

அப்பொழுது வாமனன் உதைத்த உதையில் வான் தொடப்போனவன்,,,, !

நான் நினைத்தது ? சரியாகி விட்டது ! பார்த்தாயா ? மகாபலி,,,!

அடுத்தது உன் தலைதான் !

உன் தலைக்கீரீடம்தான்,, மகாபலி மன்னா ! என்று சொன்னபடியே,,

திரிவிக்கிரமனின் காலடி தரிசனம்,,, கிடைக்காதா ? என வியந்தபடியே விழுகின்றான் !

இல்லையில்லை விழுந்து கொண்டே இருக்கின்றான் !

நீள்கின்றது ஓங்கி உலகளக்கிற உத்தமனின் கழலடி!

உன் கழலடியினை,, நான் கண்டு கொண்டேன் அய்யனே !

உன் கழலடிக்கே நான் பூசனைகள் செய்கின்றேன் அய்யனே ! என்றபடி தாமரை மலரில் அமர்ந்தபடி , பிரம்மதேவன் வலக்கரத்தால் வானம் அளக்கிற திரிவிக்கிரமனின் நீள்கின்ற இடது காலடிக்கு நீர் வார்க்கின்றார் !

**உம்மை வாளெடுத்து தாக்கலாமென்றுதான் எண்ணுகிறேன் ! ஆனால்,,,எம் மன்னர் மகாபலியே திகைத்துக் கிடக்கையில்,, இனி நானென்ன செய்வது ?**

நீள்கின்ற கழலடியைக் காட்டுகின்ற நித்திலனே !

உன் கழலடியாம் கால் போகும் திசை சுட்டுகின்ற ,,

சுட்டுவிரல் நீட்டல் போதும்,!

இதமாக வருடுகின்றேன் ! கொஞ்சம் இரங்கிடு நீ ! பேருருவே,,, என்றபடி பிரமதேவன் தன் இடது கையால் பரந்தாமனின் விரல் நீவி விடுகின்றான் !

வானம் இடிபட,,,, வந்து நீள்கின்ற கழலடி கண்டு,,இடிச்சத்தம் தர வேண்டிய மேகங்கள் கலங்கி, அமைதியாய் நிற்கின்றன !

ஆதலின் தேவலோகத்தின் கந்தர்வ இசையாளன் நான் மிருதங்கம்,, இசைக்கின்றேன்! உம் வெற்றியைக் கொண்டாடுகின்றேன் ! என்றபடி மிருதங்கம் அடித்தபடி, நாட்டியமாடுகிறாரோ ? இசை மேதை குதிரை முகத் தும்புரு எனும் கந்தர்வர் !

அத்தனே ! அருளாளனே !

இன்னும்,, எத்தனை எத்தனை திருவிளை யாடலோ ?

அத்தனையும், நான் பார்த்தபடி இருக்கின்றேன் உன்னோடு உன் வலக்கையின் கதாயுதமும், உன் சக்கரமும்,, ஆடும் விளையாடலையும், நான் இரசித்தபடியே இருக்கின்றேன் ! என்ற வண்ணம் ஈசனெனும் சிவனேசன் கையுயர்த்தி அருளாசி வழங்குகின்றார் !

இத்தனையும்,, நான் கண்டேன்!

கடல் மல்லை எனும் மாமல்லபுரத்து வராக மண்டபத்துள் நான் கண்டேன்!

பொய்யில்லை ஜகத்தீரே !


**"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன், திகழும்**
**அருக்கன் அணிநிறமும் கண்டேன், – செருக்கிளரும்**
**பொன்னாழி கண்டேன் புரி சங்கம் கைக்கண்டேன்,**
**என்னாழி வண்ணன்பால் இன்று."**

என்று அன்றொரு நாள் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான பேயாழ்வார் , இதே கடல் மல்லைத் தலத்திலிருந்துப் பாடிய பாடலின்று,,

இப்போது, என் செவிகளிலும்,,,, விழுகிறது !

உங்கள் விழியில் விழுந்து இதயம் நுழைந்தால்,,,,, வழியெல்லாம் அவன் திருக்காட்சி தருவான் ! அவனைக் கண்டு வாருங்கள் ! இனிதாய்,,,,

“உலகில் உள்ள அனைத்து சமயங்களையும் தாண்டி, இந்து சமயத்திற்கு புத்துயிர் ஊட்டி, புதிய கோணத்தில் மனிதர்களை சிந்திக்க வைத்து மாபெரும் ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்தியவர்.”



நெல்லை க. சோமசுந்தரி

# உன்னை நீ... உணர்!

**உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்த அந்த ஒற்றை வாக்கியத்திற்கு சொந்தமான இளைஞர் யார் ? என்ற கேள்விக்கு எல்லோரும் பதிலைத் தேடிக்கொண்டு இருந்திருப்பீர்கள் வாருங்கள்! அவரை நாம் சந்திக்கலாம். அந்த இளைஞர் நம் பாரத மண்ணில் பிறந்த ஒரு தவப்புதல்வன். இன்றளவும் எவ்வித தயக்கமும் இன்றி, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மாமனிதர்.**

உலகில் உள்ள அனைத்து சமயங்களையும் தாண்டி, இந்து சமயத்திற்கு புத்துயிர் ஊட்டி, புதிய கோணத்தில் மனிதர்களை சிந்திக்க வைத்து மாபெரும் ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்தியவர். கடவுள் இல்லையென்று மறுப்பவர்களாலும் கூட எந்த வித மாற்றுக் கருத்துமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறப்புப் பொருந்திய ஒரு ஆன்மீகவாதி.

அது எப்படி சாத்தியமாயிற்று இவருக்கு மட்டும் ! என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது. அவரை உங்களால் அனுமானிக்க முடிகிறதா? அவர் தான் அமெரிக்காவில், சிகாகோ பாராளுமன்றத்தில் நடந்த உலக புகழ் பெற்ற ஆன்மீக மாநாட்டில், ஆற்றிய உரையின் துவக்கத்தில் "Brothers and sisters" (சகோதர சகோதரிகளே!) என்று ஒட்டுமொத்த அரங்கத்தையும் பார்த்து விளித்துப் போது, அனைத்து மதத் தலைவர்கள் மட்டுமன்றி அங்குக் கூடியிருந்தவர்கள் அனைவரும் எழுப்பிய கர ஒலியானது அடங்குவதற்குச் சற்று நேரம் பிடித்தது. அன்று இந்திய பண்பாட்டின் பாரம்பரிய கலாச்சாரத்தைத் தன்னுடைய ஒற்றை வாக்கியத்தில் பதிவு செய்து ஒட்டு

மொத்த உலகத்தையும் தன் பக்கம் ஈர்த்தவர்.

ஆம்! அவர் தான் நம் அனைவருக்கும் பிடித்த நரேந்திரநாத் தத்தா என்ற பெயர் கொண்ட எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இன்றும் தலைமுறைகள் பல தாண்டியும் அன்போடு அனைவரின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் தன்னம்பிக்கையின் பிறப்பிடமாக நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் சுவாமி. விவேகானந்தர். இளைஞர்களிடையே இவரின் கருத்துக்கள் எப்போதுமே, மனதில் ஒரு நேர்மறையான எழுச்சியை விதைப்பதாக இருக்கும்.

அவர், தம் குழந்தைப்பருவத்திலிருந்தே எந்த ஒன்றையும் முற்றிலும் ஏற்பதற்கு முன் அதனை சோதித்துப் பார்த்து ஆராய்ந்த பின்னர் ,அதில் உண்மை இருந்தால் மட்டுமே எதனையும் நம்பும் பழக்கத்தினைக் கொண்டிருந்தார்.

இவருடைய ஆன்மீகக் கோட்பாட்டின் அடித்தளமானது எந்த ஒரு கருத்தியலையும் நாம் ஏற்றுக்கொள்ளும் முன், அதனைப் பகுத்தறிந்து, ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு உள்வாங்கி உணர்ந்து, தெளிந்து அதன் பின் ஏற்றுக்கொள்ளுதல் என்ற தத்துவத்தின் அடிப்படையில் அமைந்தது.

மேலே கூறப்பட்டுள்ள, இந்த கூற்றானது எந்த ஒரு கோட்பாட்டையும் கண் மூடித்தனமாக பின்பற்றாமல் ,ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் சுயசிந்தனையால் ஆய்ந்து தெளிதல் வேண்டும் என்பதை விளக்குகிறது.

இந்த அடிப்படையில் சுவாமி விவேகானந்தர், தான் கூறிய கருத்துக் களையோ, கோட்டுபாடுகளையோ கூட அப்படியே அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறவில்லை. எந்த ஒன்றையும் புரிந்து,தெளிந்து அதன் உண்மை தன்மையை உணர்ந்து செயல்படுங்கள் என்று குறிப்பிடுகிறார். இதைப் படிக்கும் போது, நிறைய பேருக்கு என்ன சொல்ல வருகிறோம் என்பதை உள்வாங்குவதில் சிறு தடுமாற்றம் வரலாம்.

இதனையே, நம் வான் புகழ் கொண்ட வள்ளுவர்,

**"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு."**

யார் எந்த ஒரு விடயத்தையும் கூறினாலும், கூறுபவர் உயர்ந்தவரா? தாழ்ந்தவரா? பகைவரா? என்று சொல்பவரின் தகுதிப்பற்றி ஆராயாமல்



கூற்றின் உண்மைத்தன்மையை அறிவதே மெய்யான அறிவு என்று குறிப்பிடுகிறார் .

மொத்தத்தில் எந்த ஒரு 'உண்மைத் தன்மையும் கண்டறிதல்' என்பது அவரவரின் அகம் கொண்டு சிந்திக்கிற சுயசிந்தனையால் மட்டுமே உணரமுடியும். இதுவே சுவாமி விவேகானந்தரின் ஆழ்ந்த ஆன்மீக சிந்தனை யாக கூறப்படுகிறது.

> **கண்டுபிடித்தல் என்பது மனத்தை ஒருமுகப்படுத்தி ஒற்றைப் பொருளை நோக்கி சிந்திப்பின் முடிவில் கிடைக்கும் விடையே**

அப்படியென்றால் எந்த ஒரு கண்டுபிடித்தலும் புறம் சார்ந்து அல்லாமல் அகம் சார்ந்து தான் நிகழ்கிறதா? என நீங்கள் கேட்பது புரிகிறது.

ஆம்! உண்மை தான். கண்டுபிடித்தல் என்பது மனத்தை ஒருமுகப்படுத்தி ஒற்றைப் பொருளை நோக்கி சிந்திப்பின் முடிவில் கிடைக்கும் விடையே தேடலின் புதிய கண்டுபிடிப்புகள் உருவானதற்கான காரணிகளாக இருக்கிறது. இதில், ஒற்றைச் சிந்தனையில் நிற்பதே 'அகச் சிந்தனை' எனச் சொல்லப்படும் ஆன்மீகத்தின் முதல் படியாக வரையறுக்கப்படுகிறது.

இதன் அடிப்படையிலேயே, சுவாமி விவேகானந்தர் தன் இளம் வயதிலிருந்தே எவ்வளவு பெரிய மகானாக இருந்தாலும், அவர் சொல்லும் கருத்துக்களை அப்படியே ஏற்றுக்

கொள்ளமாட்டார்.அதன் உண்மைத் தன்மையை உணர தனக்குள்ளேயே கேள்விகள் கேட்டு ஆய்ந்து அறிந்து, அதில் பதில் கிடைக்காவிடில் அந்தக் கருத்துக்களை கூறியவரிடமே விளக்கம் பெற்று தெளிந்து உணர்வார்.

ஆன்மீகம் சார்ந்த தேடலின் விளைவாக ராஜாராம் மோகன்ராய் தோற்றுவித்த பிரம்மசமாஜத்தில் நரேந்திரர் தன்னை இணைத்துக்கொண்டார். அக்காலத்தில் திருமணம் முடிந்து, ஒரு வேளை பெண்ணின் கணவர் இறக்க நேர்ந்தால், அப்பெண்ணும் உடன்கட்டை ஏறும் பழக்கம் நம் சமூகத்தில் இருந்து வந்தது. அதை அகற்ற இந்த பிரம்ம சமாஜம் பெரிதும் பாடுபட்டது என்பது குறிப்பிடத்தக்கது. முற்போக்கான இந்தக் கொள்கைகள் நரேந்திரை வெகுவாக ஈர்த்தது. அந்த இயக்கத்தில் அக்காலகட்டத்தில், அதனை நிர்வாகம் செய்த மூத்த உறுப்பினர் தேவேந்திர நாத் தாகூர் என்பவர் ஆவார் . அவரை, ஒருமுறை நரேந்திரர் சந்தித்தார்.

"கடவுளைக் கண்டறிய வேண்டும்" எனும் தாகமானது, தேவேந்திர நாத் எனும் மூத்த உறுப்பினரிடம் நரேந்திரர் நேரடியாகவே, நீங்கள் கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா? என்னால் கடவுளை காணமுடியுமா ? அதற்காக நான் என்ன செய்ய வேண்டும்? என்று சரமாரியாக கேள்விக்கணைகளைத் தொடுத்தார். தேவேந்திர நாத் தாகூர் அந்த இளைஞரின் பிரகாசமான ஒளிப்பொருந்திய கண்களை உற்றுப் பார்த்து விட்டு, மகனே! நீ சிறந்த யோகியாக வருவாய்! அதற்குரிய அம்சங்கள் அனைத்தும் உன்னிடம் உள்ளது என்று அவர் கூறிய பதில் நரேந்திரருக்கு மனதிருப்தியை அளிக்கவில்லை.

இந்த தேவேந்திரநாத் என்பவர், நம் நாட்டின் தேசியகீதத்தை இயற்றிய நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூரின் தந்தை ஆவார் என்பதை படிக்கும் போது நமக்கு ஆச்சரியமாக உள்ளதல்லவா ?

கடவுளைக் காணமுடியுமா ? காணமுடியும் எனில் அதனை எவ்வாறு நிகழ்த்துவது? அதற்கான வழிமுறைகள் என்ன? சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள் மூலமாக கடவுளை த் தரிசிக்க முடியுமா? என பல்வேறு வகைகளில் கேள்விக் கணைகளால் ஒவ்வொரு நாளும் அவரது மனம் துளைத்து எடுக்கப்பட்டது. அதற்கான விடையைத் தேடி, நரேந்திரர் புறப்பட ஆயுத்தமானார். இந்தப் பயணத்தில் அவர் கடவுளைக் காணும் சூட்சமத்தை அறிந்தாரா? அல்லது காண்பதற்கான வழிமுறைகளையாவது பெற்றாரா? எப்படிக் கண்டார்?

அது எங்ஙனம் நிகழ்ந்தது என்பதனை அடுத்த இதழில் காண்போம்.

(உணர்வுகள் தொடரும்...)

# திருமண வாழ்த்து



அனைத்திந்திய தமிழ்ச்சங்க தமிழ்த்திறன் ஆய்வு நடுவம் துணைத்தலைவர் முனைவர் மு. கோவிந்தராசன் அவர்களின் மகள் சரளாதேவி நடராஜன் திருமண நிச்சயதார்த்தம், சென்னை முகப்பேர் மேற்கு பி.ஆர். பார்ட்டி பேலஸில் நடைபெற்ற நிகழ்வில் அனைத்திந்திய தமிழ்ச்சங்க தலைவர் "சொல்லின் செல்வர்" ஆவடிக்குமார் கலந்துக் கொண்டு மணமக்களை வாழ்த்தி மகிழ்ந்தார்.



# நானும் ஆசிரியர்



"மகள் எழுத ஆரம்பித்தபொழுது ஹிந்தியில் சரளமாக பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்டேன்"

லாகோஸ் என்பது ஆப்ரிக்கா நாடான நைஜீரியாவில் மிக முக்கியமான பங்குவர்த்தக நகரம்! அருமையான கடலை ஒட்டிய நகரம் மக்களும் இனிமையானவர்கள் அவர்களுடைய ஆஜானுபாகுவான தோற்றமும், பளீரென மின்னும் நிறமும் ஓர் வகையான அழகு . அதிலும் சிலருடைய கண்களும் முகமும் செதுக்கி வைத்த சிற்பம் போல் இருக்கும் . குழந்தைகள்.... எல்லாம் அழகு.... அவர்களுடைய சுருள்முடியும் பெரிய அழகு மிளிரும் கண்களும் .... காண்பவரைக் காந்தமென இழுக்கும்.

குடும்ப சூழ்நிலை காரணமாக நம் நாட்டை விட்டு ஐஸ்வரியம் தேடி அயல்நாடு சென்றவர்களில் நாங்களும் இணைந்தோம்.

எனது கணவர் வேதியியலில் முனைவர் பட்டம் பெற்றவர். பல்வேறு காரணங்களால் நான் எடுத்த பி. ஏ. ஆங்கிலம் பட்டப்படிப்பை முடிக்க முடியவில்லை.

இந்நிலையில் ' ப்ளேகுருப் ' என்னும் பள்ளி நடத்தும் வாய்ப்பு எனக்கு வந்தது.

நைஜீரியாவில் இந்தியர்களுக்கு என்று தனிப் பள்ளி உண்டு (சி.பி.எஸ்.இ.) . அப்பள்ளியின் ஆசிரியர்களும் அங்கு வாழும் இந்தியர்கள் தான் . ஓரிரு நைஜீரிய ஆசிரியர்கள் அதுவும் 10 - 12 வகுப்புகளுக்கு மட்டும் பாடம் எடுத்தார்கள் .

இந்த சிபிஎஸ்இ பள்ளியின் 'எல். கே.ஜி' நுழைமுக தேர்வுக்கு குழந்தைகளைத் தயார் செய்வது எங்கள் மாதிரியான 'ப்ளேகுருப் ' பள்ளிகளின் வேலை .

இந்தப் பணியில் 14 வருடம் மனமுவந்து களித்தேன் . 2லிருந்து 5 வயது வரையான கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரைக்கும் உள்ள பல மாநில இந்திய குழந்தைகளுடனும் அவர்களுடைய பெற்றோர்களுடனுமான பந்தம் எனது வாழ்க்கையின் பொக்கிஷம் !

எனது மகன் ஹிந்தியில் எழுதிய பொழுது நானும் அவனுடன்




சேர்ந்து படிக்க ஆரம்பித்து , மகள் எழுத ஆரம்பித்தபொழுது ஹிந்தியில் சரளமாக பேசவும் எழுத படிக்கவும் கற்றுக் கொண்டேன் பாடத்திட்டமும் பயில்விக்கும் முறையும் எனக்குள் ஆண்டவன் அருளால் இயல்பாகவே ஊற்றுப்போல பொங்கியது கண்டு வியந்தேன் .

கருமமே கண்ணாய் பணியாற்றினேன் .

குரு பிரம்மா ...

சரஸ்வதி நமஸ்துப்யம்...

Thank u lord.....

என்று பிராரத்தனையில் ஆரம்பித்து

நமது தேசிய கீதம்

‘ஜனகணமன’

நைஜீரியாவின் தேசியகீதம்

“ஆரைஸ் ஓ காம்பேட்ரியட்ஸ்“

என்று பாடவைத்து

ABC..... 123...

ட்வின்கிள் ட்வின்கிள்... என்று ஆங்கில பாடல்களையும் மச்சிலி ஜல்கி ....என்று ஹிந்தி பாடல்களையும் , மற்றும் பழங்களைப் பற்றியும் ,காய்கறிகளைப் பற்றியும், விலங்குகள் பற்றியும், வடிவங்கள் பற்றியும் சுவராசியமான விதத்தி லும் மனதில் பதியும் வண்ணமும் , கூடவே மரியாதையையும், ஒழுக்கத்தையும் சாப்பிடும் முறையையும், பொதுஅறிவையும் பகிர்ந்து விளையாடும் முறையையும் கண்டிப்பு கலந்த பாசத்துடன், மிகமிக சிரத்தையாகக் கற்பித்தேன் என்பதைப் பணிவு கலந்த பெருமையுடன் பகிர்ந்து கொள்கிறேன்!

A-z வரைக்குமான 26 எழுத்துக்களுடைய 50-60 சித்திரங்கள் ( ஆப்பிள் , பந்து பூனை......) மிக சுலபமான விதத்தில் வரைய கற்றுக்கொடுத்தேன்.

பல மாநில பண்டிகைகளையும் கொண்டாடி மகிழ்ந்தோம்!

லாகோஸின் வெவ்வேறு பகுதிகளில் இந்தியா வின் பல்வேறு மாநிலத்தவரால் நடத்தப்பட்ட 10-12 ப்ளேகுருப் பள்ளிகளில் ‘ஒரு தமிழரால் ‘நடத்தபட்டது என்னுடையது மட்டுமே என்பதில் தமிழனாய் பெருமை கொள்கிறேன்.

எனது வாழ்க்கையின் மிக சுவராசியமான முக்கியமான கால கட்டத்தில் ஒரு அன்னிய தேசத்தில் நானும் ஒரு ஆசிரியராய் வாழ்ந்ததை எண்ணி மகிழ்கிறேன்.

தமிழ்த்திரு எஸ்.வி.ஆர்.மூர்த்தி

# தமிழ்நாடு அரசு இலச்சினை

**தமிழ்நாடு அரசு இலச்சினை என்பது இந்தியாவின் தமிழ்நாடு மாநில அரசால் அலுவல் ரீதியாக அதிகாரப்பூர்வமாக பயன்படுத்தப்படும் சின்னம் அல்லது இலச்சினை ஆகும்.**

இந்த இலச்சினை தமிழ்நாடு அரசின் அலுவல்முறை கடித முகப்புகளிலிலும்,தமிழகஅரசின்,உயர் அலுவலக கட்டிட முகப்புகளிலும் இடம்பெறுகிறது. மேலும் தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் அவரது அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்கள், தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் அவைத்தலைவர், எதிர்க்கட்சித்தலைவர், மற்றும், தமிழ்நாடு அரசின் கீழ் அலுவல் புரியும் செயலாளர் மட்டத்திலான இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் உள்ளிட்டோரின் வாகன முகப்புகளிலும் இந்த இலச்சினை இடம் பெற்றிருக்கும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற போது தமிழ்நாடு, கேரளா, ஆந்திர பிரதேசம், கர்நாடகம் ஆகியவை சென்னை மாகாண மாக இருந்தது. சென்னை மாகாண முதல்வராக ஓமந்தூரார் ராமசாமி ரெட்டியார் (1947ஞ1949) இருந்த போது இந்த இலச்சினை பற்றிய முன்மொழிவு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டு அது தமிழ் நாட்டின் அரசு இலச்சினையாக 1949 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு இந்திய பிரதமராக இருந்த போது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த இலச்சினை மதுரையைச் சேர்ந்த ஓவியரான ஆர். கிருஷ்ணராவ் என்பவரால் வரையப்பட்டது.



தமிழக அரசின் கோபுர இலச்சினையின் பின்னணியில் , முன்னாள் தமிழக முதல்வர்கள், திரு.பி.எஸ்.குமாரசுவாமி ராஜா, திரு.கே.காமராஜர், பேரறிஞர் அண்ணா,ஆகியோரின் பணியும் அளப்பரியது.

தமிழ்நாடு அரசின் இலச்சினை வட்ட வடிவில் காணப்படுகிறது. வட்ட வடிவ மேற்புற பட்டையில் தமிழ்நாடு அரசு என்றும் வட்ட அமைப்பிற்கு வெளிப்புறத்தின் கீழே “வாய்மையே வெல்லும்“ எனும் குறிக்கோளுரையும் தமிழ் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. இலச்சினையின் மையமாக திராவிடக் கட்டிடக்கலையையும் தமிழகக் கலாச்சாரத்தையும் எடுத்துக்கூறும் வகையில் அடர்மஞ்சள் நிறத்தில் ஒரு கோபுரம் காணப்படுகிறது.

இந்த கோபுரம் விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லி புத்தூர் ஆண்டாள் கோவிலின் ஸ்ரீவடபத்திரசாயி பெருமாளுக்கு அர்பணிக்கப்பட்ட பதினொரு நிலை கோபுரத்தை அடிப்படையாகக் கொண்டது..

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியான கோதை நாச்சியார் ஆண்டாள் திருக்கோவில் இராஜகோபுரம் 196 அடி உயரத்துடன், அன்றைய நிலையில், தமிழகத்தின் மிக உயர்ந்த கோபுரமாகவும், இருந்தது ! அதுமட்டுமின்றி, ஆண்டாள் கோவில் கோபுரத்தில் துவாரபாலகர்கள் என்னும், காவல் தெய்வங்களைத் தவிர்த்து வேறு எந்த விதமான, இறை உருவங்களும், இல்லை என்பதும், குறிப்பிடத்தக்கது !

கோபுரத்தின் கீழ்புறத்தில் இந்திய தேசிய இலச்சினை யில் உள்ள நான்கு சிங்க முகம் காணப்படுகிறது.

இந்திய தேசிய இலச்சினையின் பின்னணியில் இருபுறமும் இந்திய தேசியக் கொடிகள் காணப்படுகிறது.

இந்திய தேசியக்கொடி வேறு எந்த மாநில இலச்சினைகளிலும் இல்லை, என்பது தமிழகம், இந்திய தேசீயத்தினை மாண்புடன் போற்றுகிறது என்பதனை வெளிக்காட்டும் வண்ணம் அமைந்துள்ளது.



# ஆடல்கலை

கவிமாமணி சுப்புலட்சுமி ஆறுமுகம்

**நம் நாட்டின் தொன்மை மிக்க கலை பரதக் கலை. ஆதி சிவனார் பார்வதிக்கு அருளியதை அன்னை பராசக்தி பரத முனிவருக்கு வழங்கிய கலை இது. பரதர் உலகிற்கு எடுத்துரைத்தமையினால் பரதநாட்டியம் எனப் போற்றப்படுகின்றது.**

பாரத நாட்டின் பெருமையைப் பாரோரும் உணர்ந்திடச் செய்வதில் பெரும் பங்கு இந்தக் கலைக்கு உண்டு.

கர்நாடக இசையும் பரதமும் இரு கண்கள் எனலாம். இசை, நடனம், இசைக் கருவி மூன்றும் சேர்ந்து பிறந்தது இக்கலை.

இவ்வுலகம் ஐம்பூதத் தத்துவத்தில் இயங்குகின்றது. இந்த அண்டத்திலுள்ளதுதான் நம் பிண்டத்திலும் உள்ளது.

நிலம், நீர், ஆகாயம், காற்று, நெருப்பு, ஐம்பூதங்கள். நம் உடலில் மெய், வாய், கண், மூக்கு, செவி ஐம்பூதங்களாக உள்ளது.

அந்த ஆடல்வல்லான் சிவபெருமான் ஒரு காலைத் தூக்கி நடனமாடிக் கொண்டிருக்கிறான் நடராஜனாக.

ஐம்பெரும் சபைகளாக, சித்திர சபை, தாமிரசபை, ரத்னசபை, வெள்ளியம்பலம், கனகசபை இவைகளே சாட்சிகளாகத் திகழ்கின்றது.

அந்த ஆடலரசன் நம்முள்ளும் ஆடுகின்றான். புரியவில்லையா?.... இதயத்தைத் தொட்டுக் கேளுங்கள்... லப்...டப்... இசையோடு கேட்டுப் பாருங்கள்... தை... தை... தை... பரதநாட்டியத்தின் முதல் அடியே இதுதானே... கோபத்தின் உச்சத்தில் தொட்டுப் பாருங்கள் தரிகிடத்தோம்... தரிகிடத்தோம் இந்த இசையை உணரலாம்.

அந்த ஈசன் நமக்குள் ஆடுகிறான். அவன் ஆட்டம் நின்றால் நாம் நாமில்லை.

ஆடல் அரசனின் கையிலுள்ள உடுக்கை ஓங்காரம் ஒலி பிறக்கும். அகங்காரம் அழிக்கும் அபயக்கரம் காப்பு. தாங்கும் திருக்கரத்து நெருப்பில் ஒடுக்கம். பாங்குடன் மிதித்த மலரடி மறைப்பு. ஆங்கு தூக்கிய திருவடி அருள் என ஓங்கும் ஐந்தும் அவன் செயலே.

பரதம்... ப... பாவம்... ர... ராகம்... த... தாளம்... இவை சேர்ந்ததுதான் பரதக்கலை.


முகபாவங்களில் நவரசங்களையும் கொண்டுவருவது அதையும் விட இசை லயத்துடன் தாளக்கட்டோடு சேர்ந்து வருவதுதான் சிறப்பு.

பரத நாட்டியம் ஆடுபவர் இதற்கென தயாரிக்கப்பட்ட பிரத்யேக உடைகள், நகைகள், ஒப்பனை சொற்களைப் புரிந்து, அபிநயம் பிடிப்பது கதாபாத்திரங்களோடு ஒன்றிப் போதல். இவை அவர்களுக்குக் கைவந்த கலை, தன் மாறும் முகபாவங்களில் உணர்ச்சிகளைக் கொட்டி பார்ப்போர் மனதைக் கவரவேண்டும்.

> **ஒரே ஒரு பாடலில் அனைத்து வித உணர்வுகளையும் கொட்டி ஆடிட இயலும் தேர்ந்த நாட்டியக் கலைஞரால், பெரும்பாலும் பெண்டிர்தான். இந்தக் கலையை பயின்றவர்கள் ஆவர்.**

ஒரே ஒரு பாடலில் அனைத்து வித உணர்வுகளையும் கொட்டி ஆடிட இயலும் தேர்ந்த நாட்டியக் கலைஞரால், பெரும்பாலும் பெண்டிர்தான். இந்தக் கலையைப் பயின்றவர்கள் ஆவர். தற்போது ஆடவரும் கற்றுத் தெளிகின்றார்.

சிவபெருமான் ஆடும் நடனம் தான் 'தாண்டவம்' எனப்படும். மகிழ்ச்சி



நாட்டிய முத்திரைகளின் தொகுப்பு

பொங்க ஆடிடுவார் "ஆனந்த தாண்டவத்தில்" கோபத்தின் உச்சத்தில் ஆடும் நடனம் 'ருத்ர தாண்டவம்' எனப்படும். மென்மையான அசைவுகள் பதங்களுடன் பார்வதி அன்னை ஆடும் நடனத்திற்கு 'லாஸ்யா' என்பார்கள்.

உடல் அசைவுகள் "கை முத்திரைகள்" சேர்ந்து "அடவு" எனப்படும் பல அடவுகள் சேர்ந்தது "ஜதி" என்பர்.

காலில் சலங்கை கட்டி, பெண்மைக்கே உரிய நளினத் துடன் நங்கை ஒருத்தி மேடையில் வருகிறாள் ஆடை அலங்காரத் துடன், தமிழ்ப் பண்பாட்டுடன். மேடையின் ஒரு பக்கம் தாள வாத்தியங்களும், நட்டுவாங்கம் பாடும் குரு என அமர்ந்திருப்பர்.

நம் கலாச்சாரப்படி முதலில் பூமித்தாயைத் தொட்டு வணங்கி சபையோரை வணங்கி, குருவையும் இசைக் கலைஞர்களையும் தலை வணங்கி ஆடத் துவங்குகிறாள்.

கணேசனுக்கு முதல் துதி... அதன் பின் என்ன பொருள்பட ஆடவந்தாளோ அதை அந்த நாடகத்தைத் தன் முகபாவங்களில், அபிநயம் பிடித்து கை விரல் முத்திரையில், காட்டி சலங்கை ஒலியொலிக்க, சுழன்று ஆடுகின்றாள். அந்த ஆடல்கலையில், அவளுக்குத் துணையாக, மற்றப் பெண்களும் இணைந்து ஆடிடுவர்.

இதிகாச, புராணக் கதைகளை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்தும் திறமை படைத்தக் கலை இந்த பரதக்கலை.

சிதம்பரம் நடராஜர் கோவில், மற்றும் சிவன் கோவில்களிலும் பரதக்கலை சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளது சான்றாக உள்ளது.

வாய் திறந்து பேசாது,புன்னகையும் மென்னகை, கோபம், பயம், அருவருப்பு கசப்பு என அத்தனை ரசனைகளையும் வெளிக்காட்டும் கலையிது.

கை அசைவுகள், ஒற்றைக்கை, இரட்டைக்கை, என இரண்டாக பயன்படுத்துவர், ராகம், தாளம், பல்லவி பதம், பாவம், நிருத்தம், நிருத்தியம், தட்டவு, தாளம், தில்லானா என முத்திரைகளில் முகபாவங் களில் கொண்டு வந்து நிறுத்துவர்.

> **இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் இணைந்து வரும் இப்பரதக் கலை நம் நாட்டின் சொத்து.**

நிறைவாக மங்களம் பாடி நிறைவு பெறும் நடனம்.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் இணைந்து வரும் இப்பரதக் கலை நம் நாட்டின் சொத்து. இந்தப் புராதனக் கலையை வளர்க்க நாம் அனை வரும் பாடுபட வேண்டும்.

நம்முடைய பாராட்டுகளும் வாழ்த்துகளும் இந்த பரதக்கலை மென்மேலும் வளர வித்தாகிடும்.

இன்னொரு செய்தி இந்தக் கலையில் உள்ள முத்திரைகள் எல்லாம் நம் உடலில் ஏற்படும் நோய்க்கு மருந்தாகும்.

சுண்டுவிரல் முதல் பெருவிரல் வரை இந்த ஐந்து விரல்களிலும், நம் நோயின் அறிகுறியை அதை குணப்படுத்தும் முறையிலும் அறிந்துகொள்ளமுடியும்.

பண்பாட்டுக் கலையை வளர்ப்பது நம் கடமை என உணர்வோம்.

பரதக்கலையெனும் ஆழ்கடலுக்குள் மூழ்கினேன். சில முத்துக்களை மட்டுமே தர முடிந்தது. இன்னும் தேடிப்பார்த்தால் ஆயிரமாயிரம் முத்துக்கள் தென்படும்.

# மறைந்த மனம்

**மாலை அதோ அந்த மஞ்சள் நிறத்தை மலர்கள் தாமேற்று மலரத்துடிக்க, புன்னை மரப்பூவின் அழகை மொத்தமாகப் பெற்ற அவளை என் மார்பு மீது சாய்த்துப் பார்க்கும் நேரம் வரமாக தந்தானோ இறைவன் என நினைத்தே, அவள் தலையைக் கோதினேன்.**

முதலாக சந்தித்த அவள் அந்த தெய்வீக வடிவத்தின் சொந்தக்காரியாய் இன்னும் என் மனக் கண்ணில் நிலைக்க.

ஒல்லியான உருவம், அளவான உயரம், இருப்பத்தைந்தை தாண்டாதப் பருவம். மென்மையான குரலைப் போன்றே உடல் எளிதில் பிறரைக் கவரும் காந்தக் காதல் கண்கள்-அந்த அதிரூப சுந்தரியே, என் காதலி.

நான் அடிக்கடி கொடைக்கானலுக்கு செல்வது பிடித்ததொன்று அதுவே வழக்கமானது.

ஏதோ ஓர் உணர்வு, கண் கணைகள் தாக்குவது போல உணர என் பார்வை சென்ற இடத்தில் பெற்றோருடன், ஒரு வளந்தவன், அண்ணாவாக இருக்க வேண்டும். அவர்களோடு அவள்.

என்னை திரும்பித் திரும்பி பார்த்த அந்தப் பார்வை என் மனதைத் துளைத்தது. அவள் அண்ணன் அவளை அழைத்த விதத்திலிருந்து கயல்விழி அவள் பெயர் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

நொடிகள் நிமிடங்களாக, அவள் என் அருகே வந்து, பக்கத்தில் உட்கார்ந்து நீங்கள் இன்னார் தானே! என விசாரிக்க 'ஆம்' என்றேன். ஏனோ ஈர்ப்போடு.

கொடைக்கானலின் குளிர் மேகம் தேகத்தை வருட ஒரு சிலிர்ப்போடு, சிந்திய புன்னகை மனதை குளிரத்தான் செய்தது. அவள் பேசியத் தோரணையில் மெத்தப் படித்தவளாக காண்பித்தது.

அவள் இதிகாசங்களை அலசிய விதம், குறிப்பாக, கதை மாந்தர்களை பேசும்போது கண்கள் கோபத்தை உமிழ, சற்றே திகைத்துத்தான் போனேன்.

இலக்கியங்களில் அகத்தை பல விதம் என்பது போல் அவள் பேச்சு என நினைக்கதான் செய்தது. கடலும் வானமும், கரையும் அலையும், தென்றலும் மாலையும், தமிழும் தொன்மையும், இதைப் போலத்தான் தமிழ் இலக்கியமும் தமிழர் வாழ்வும் என்று அவள் முடிக்கும் முன், என் மனம்

உள்ளே சொன்னது, நானும் அவளும்...

உங்களுக்குத் திருமணம் ஆனதா? என்ற என் கேள்விக்கு, 'இல்லை' என்ற பதில் எனக்கு ஆறுதலாகத் தான் இருந்தது. உங்களுக்குக் காதல் பிடிக்காதா! என்றேன்.

'தெரியாது' நான் இன்னும் காதலிக்கவே தொடங்கவில்லை. உண்மையான, புனிதமான ஓர் உறவு வருகின்றவரை நான் காதலைப் பொதுவாகவே பார்க்கிறேன்.

காதல் என்பது மனவளர்ச்சியின் அடையாளம். உருவத்திற்கான உருவத்தின் அங்கீகாரம்.

என்ற எதார்த்தமான உரையாடல் அவளின் மன நிலையை சொல்லாமல் சொல்லவது போல, என்னை என் கவி உள்ளத்தைத் தூண்டுவதாக இருத்தது.

நான் உடனே, மலர்கள் மோதுவதுபோல் மனங்களின் மோதல், ஆன்மாவின் தேடல் அதுவே அழகியக் காதல் என்றேன்.

சற்றே நாணம் கொண்டாள். அவளுள் பெண்மையிருப்பது வெளிப்பட்டது.


சிணுங்கும் சிங்காரமும், சிரிக்கும் அழகிய கண்ணும், மந்தகாசப் புன்னகையும், ஏனோ, எனக்கு தேவலோகத்தின் அழகியைப் போல காணப்பட்டாள்.

இதுவரைப் பெற்றோர் கவலைப்படாது இருந்ததைப் பார்த்தவுடன், அவளின் சுதந்திரத் தையும், தற்காத்துக் கொள்பவள் என்ற நம்பிக்கை இருந்திருக்க வேண்டும்.

ஏனோ அன்று ஆதவன் தன் அலுவல்களை வேகமாக முடித்து விட்டான் என்றெண்ணியதை அவளும் உணர்ந்திருப்பாள் என்பது போல் விண்மீன்கள் விழிப்பு மின்மினி பூச்சியை மின்னச் செய்தது.

இந்த இன்ப உணர்வு தடமாறும் விதமாய், அந்த சத்தம்.

தொடரும்.



# இலக்கியத்தின் தன்மைகள்

## இலக்கியம் விளக்கம்

மனிதன் படைத்துக்கொண்ட நாகரிகக் கருவிகளுள் சிறந்து விளங்குவது மொழியாகும். பேசுவதற்கும் எழுதுவதற்கும் உரியதாக மனிதன் படைத்துக்கொண்ட மொழி இல்லையெனின், இன்றைய நாகரிக வளர்ச்சியே இல்லை. அத்தகையமொழியை, மொழியின் சொற்களையே ஊடுபொருளாகக் கொண்டு அமைவது இலக்கியமாகும்.

இலக்கியம்... மு.வ. கருத்து. சிற்பம், ஓவியம் முதலான கலைகளைப் பார்வை உள்ளவர்கள் அனைவரும் காணலாம். காண்பதற்கு மொழி தேவையில்லை.

ஆனால் இலக்கியக்கலை சொற்களாலானது. ஆகவே, எந்த மொழியில் ஓர் இலக்கியம் படைக்கப்பட்டிருக்கிறதோ, அந்த மொழியறிவுடையோர் மட்டுமே இலக்கியக்கலையை உணரமுடியும். இலக்கியக்கலைக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. மற்றக் கலைகள் காலப் போக்கில், காற்றாலும், மழையாலும், வெயிலாலும் அழியக் கூடியவை.

இலக்கியம் அவ்வாறு இல்லை. நிலைத்து நிற்கும். அழிவில்லை.

மிகப்பழங்காலத்து ஓவியம், சிற்பம், கட்டடம் ஆகியன அழிந்து விட்டன. ஆனால் இலக்கியங்கள் மக்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்று மு.வ. இலக்கியத்திறன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆயிழை நங்கை.... விளக்கம்

ஆய்தல் என்பதற்குப் பிரித்தெடுப்பது,



அலமரு திருமுகத்து ஆயிழை நங்கை' எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

ரா.சீனிவாசன், சிலப்பதிகாரம், கட்டுரைக் காதை .ப 138

ஆராய்ந்து எடுக்கப்பட்ட அணிகலன் எனத் தவறாகப் பொருள் கொள்வர்.கணவன்

தன்னைவிட்டுச் சிலநாள்பிரிந்து வாழ்ந்த காலத்தில், மங்கல நாணைத்தவிர,வேறு

அணிகலன்களை அணியாத கண்ணகி, கணவனை இழந்த நிலையில், அணிகலன்களைத் தேர்ந்தெடுத்தா? அணிவாள். இங்கு 'ஆய்' என்னும் சொல், ஆராய்ந்து எடுப்பதைக் குறிக்க வில்லை.' குறை நீக்கிநிறை செய்தல்' என்னும் பொருளில் வந்துள்ளது.

கொலையுண்ட கோவலன் குற்றமற்றவன் என்பதை நிரூபித்து, அவன் புகழினை நிலை நிறுத்தக் காரணமாய் இருந்த சிலம்பு' ஆயிழை'

எனப்பட்டது.

:'இணையரிச்

சிலம்பொன்று ஏந்தியகையள் 'கண்ணகி'

அச்சிலம்பினால் வென்றதால்,' ஆயிழை நங்கை'என அழைக்கப்பட்டாள். (வழக்குரை காதை வரி 26

## ஆய்தொடி அரிவை

ஆய்தொடி அரிவை' என்னும் தொடர் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது.(வேட்டுவ வரி,வரி.96). இத்தொடர் ஆராய்ச்சிக்கும்,

மகளிருக்குமுள்ள நெருங்கிய தொடர்பை உணர்த்துகிறது. வளையல்கடை, சேலைக்கடை, நகைக்கடை ஆகிய இடங்களுக்குச்செல்லும் மகளிர், அங்குள்ள அனைத்துப் பொருட் களையும் முதலில் காண்பர். பிறகு அவற்றுள் பலவற்றை எடுத்துக்காட்டச் சொல்வர். தமக்குப் பிடித்தவற்றை வாங்கிவருவர். பிறகு அதனை வீட்டில் சேர்ப்பர். வாங்கிவந்த அனைத்தையும் ஒரிடத்திற்குச் செல்லும் போது அணிந்து கொள் வது அவர்தம் வழக்கமாகும்.

அவற்றுள், அணிந்து செல்லும் சேலையின் நிறத்திற்கும், செல்லுமிடத்திற்கும் ஏற்ப,அழகுற அணிந்து செல்வர்.இதன்வழி, இலக்கிய ஆராய்ச்சியும் முறையாக, சரியாகச் செய்ய வேண்டும் என்பதுஉணரப்படுகின்றது.

தெரிந்து எடுப்பது என்பது பொருளாகும். அரிசியில் கல் ஆய்கிறார். கீரையை ஆராய்ந்து கொண்டிருக்கிறார் என்னும் தொடர்களில், வேண்டாதவற்றை நீக்கவும்,நல்லனவற்றைத் தேர்ந்தெடுக்கவும் ஆய்

என்னும் சொல் பயன்பட்டிருக்கிறது.

இதனை உணர்ந்த திருவள்ளுவர்,

**ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறைதான் சாம் துயரம் தரும்.** என்கிறார்.

குறள்792

ஒருவருடைய குணம், செயல்களை மீண்டும் மீண்டும் ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும். ஆராய்ந்து கொள்ளாத நட்பு, தான் இறப்பதற்குரிய துன்பத்தைத்தரும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

# எம்முளும் உளன் ஒரு பொருநன்...!

**பு**லன இடுகை வழியே ஒரு செய்தியைப் படிக்க நேர்ந்தது. "பொருட் களைப் பயன்படுத்துங்கள் நேசிக்காதீர்கள்.. மனிதர்களை நேசியுங்கள் பயன்படுத்தாதீர்கள்" என்பதே அது. பல செய்திகளைக் கடந்த கண்கள் இதைப் படிக்கும் போது அங்கேயே நின்றது. சூழல் அவ்வாறு மாற்றப்பட்டிருக்கிறது. மனிதர்களை நேசிக்க இங்கே யாருக்கும் நேரமில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு செய்தித்தாளில் ஒரு செய்தி வந்திருந்தது. பெற்றோருக்கு ஒரு மகன் இருந்திருக்கிறான். படிப்பு, வேலை, திருமணம் என்று அவனுடைய வாழ்க்கையை அவன் வெளிநாட்டில் தீர்மானித்துக்கொண்டான். காலம் நகர்ந்தது. உடல்நிலைக் காரணமாக அவனது தந்தை இறந்தார். கணவனை இழந்த அந்த அம்மாவிற்கு தனிமைத் துணையாகவும் சிறையாகவும் மாறிபோனது.

ஆறுமாதங்கள் கடந்த நிலையில் வெளி நாட்டில் இருந்த மகன் தாயைக் காண வந்திருந்தான். தாய் வசித்து வந்தது அடுக்குமாடி குடியிருப்பு. வீட்டின் கதவு பலமுறை தட்டியும் திறக்கப்படாத நிலையில் அங்கிருப்போரின் உதவியோடு கதவு உடைக்கப்பட்டது. கதவு உடைக்கப்பட்ட வீட்டினுள் அந்த தாயின் உடல் அழுகிய நிலையில் காட்சியளித்தது. அவர் இறந்து பல நாட்களும் சில மாதங்களும் ஆகியிருந்திருக்கிறது. இச்செய்தியினைப் படிக்கும்போது பல கேள்விகள் மனத்தை இரணப்படுத்தியது. மகனை வெளிநாட்டிலும், கணவனை மரணத்திடமும் இழந்த அந்தப்பெண் தனிமையில் இருந்த நிலை மிகக்கொடுமையானது. அவள் இறந்து சில மாதங்கள் ஆனதாக செய்தி வந்த நிலையில் அத்தனை நாட்கள் மகன் தொடர்புகொள்ளவில்லையா? அந்த அளவிற்கு மகனுக்கு வேலையா! மகன்தான் இப்படி இருந்தான், அந்த அம்மா வசித்த வீட்டின் சுற்றத்தாருக்கும் அவரோடு தொடர்பில்லாமல் போனதா? அந்த அளவிற்கு தனிமையில் அவர் தன்னைப் புகுத்திக்கொண்டாரா? என்று பல கேள்விகள் கண்களில் துளிகளாய் நிறைந்தது.

இன்று பல உறவுகள் அப்படியான நிலை யிலேயே இருக்கின்றன. ஆழ்ந்த அன்பும், நட்பும், உரிமையும் உணரக்கூடிய உறவுமுறைகளைக் காண்பது அரிதாகிவிட்டது. இந்த நினைவுகளின் தொடர்ச்சியாக மனம் முன் வந்தவர் சங்க கால ஔவையார். சிறந்த உறவுமுறை, ஆழ்ந்த நட்பு, உரிமை என்றாலே மனக்கண் முன் வருவது அவரது உருவமாகத்தான் இருக்கமுடியும்.

பெண் ஆணுடனான ஆழ்ந்த நட்பிற்கு மிகப் பெரிய சான்று ஔவை. அதிலும் அதியனோடு அவருக்கிருந்த நட்பு அனைவரும் அறிந்த ஒன்று. ஔவையின் நட்பை நினைக்கையில்,

> பெண் ஆணுடனான ஆழ்ந்த நட்பிற்கு மிகப் பெரிய சான்று ஔவை. அதிலும் அதியனோடு அவருக்கிருந்த நட்பு



"களம்புகல் ஓம்புமின், தெவ்விர்! போர் எதிர்ந்து,
எம்முளும் உளன்ஒரு பொருநன்; வைகல்
எண் தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால்அன் னோனே."

என்னும் புறநானூற்று (87) பாடலின் வார்த்தைகள் மனத்தில் அங்கும் இங்கும் சுழல ஆரம்பித்தது. எத்தனை அழகானபாடல். அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் மன்னனுக்கு எதிராக எதிர்நாட்டு படையினர் திரளுகின்றனர். அப்படையினரை எச்சரிக்கும் வகையில் ஔவை பாடியப் பாடல் இது.

இந்தப்பாடல் எழுதப்பட்ட காலக்கட்டத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். இக்காலச் சூழலில் பெண்கள் தங்களது நட்பிற்காக பேசுவது என்பது வியப்பிற்குரிய விஷயமன்று. ஆனால் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் ஒரு பெண் தன் நட்பிற்காக அதிலும் ஆணுக்காக முன்நின்று பேசியப்பாடலிது. ஒரு போரையே தடுக்கிறாள். உன்னை விட மிகச்சிறந்த வீரன் என்னிடம் உள்ளான் என்பதை எவ்வித தயக்கமும், யூகமும் இல்லாமல் எதிரி நாட்டு படையினர் முன் உறுதியாக கூறுகிறாள். அவளது நண்பனின் மீது அத்தனை நம்பிக்கை அவளுக்கு. அதுமட்டுமல்லாமல் அதியனோடு போர் என்னும் செய்தியை அறிந்த நிலையில் அதியனைவிடவும் அதீத கோபம் கொண்டவளாக ஔவையை அங்குக் காணமுடிகிறது. ஆழ்ந்து நோக்கினால் காரணம் புரியும். ஔவையின் கோபம் நிறைந்த குரல் எதிரிநாட்டு படையினரிடம் சொல்வதாகயில்லை. எச்சரிப்பதாகவே அமைகிறது. அந்த எச்சரிக்கும் உரிமையை அதியன் ஔவைக்கு வழங்கியிருக்கிறான். உரிமை என்பது உணர்வதும், உணர்த்துவதும்தான் என்பதையும் இங்குக் காணமுடிகிறது.

> அன்பு யாரிடமும் வரலாம். உரிமை உணர்வோடு கலந்தவர்களிடம் மட்டுமே வரும்.

என் மன்னனிடம் என் நண்பனிடம் உன் வீரம் வெல்லுமா? என்னும் வகையில் அந்தக்குரல் அமைந்திருக்கிறது. அதிலும் "எம்முளும் உளன்" என்று ஔவை உரைப்பது அவருடைய மனத்தில் அதியனுக்கான இடத்தை, உரிமையை, நட்பின் ஆழத்தை உணர்த்துகிறது. தனக்குள் இருப்பவனுக்காகப் பேசும் நிலையிது. அத்தகைய உறவின் அழகியலை புறநானூறு சொல்கிறது.



அன்பு யாரிடமும் வரலாம். உரிமை உணர்வோடு கலந்தவர்களிடம் மட்டுமே வரும். அத்தகைய உரிமையானவர்களிடம் அவர்களுக்கான அன்பையும், ஆறுதலையும், நேரத்தையும் தருதல் வேண்டும். இக்கால வெளியில் உறவுகள் எளிதாகப் பார்க்கப்படுகிறது. பெரும்பான்மையான உறவுகள் காரணகாரியங்களோடு வளர்க்கப்படுகிறது. காலச்சூழல் எதுவாகினும் மனித வாழ்வின் அடிப்படை அன்பு. அதைச் சுற்றியுள்ள அனைவருக்கும் பகிர்தல் வேண்டும். இதனை நமது இலக்கியங்கள் நமக்குக் கற்றுத்தர மறப்பதில்லை. அந்தக் கற்றலை நாம் மனத்தில் நிலைநிறுத்த வேண்டும். அந்த நிலைநிறுத்தலுக்கு இப்புறநானூற்று பாடலும் பின்புலமாக அமையும்.

# சென்னையில் பிறந்த பிரியங்கா ராதாகிருஷ்ணன் நியூசிலாந்து நாட்டின் அமைச்சரானார்

**நியூசிலாந்தில் கடந்த மாதம் 17ஆம் தேதி நடந்த பொதுத் தேர்தலில் பெண் பிரதமர் ஜெயசிந்தா அமோக வெற்றி பெற்று மீண்டும் பிரதமரானார்.**

அவர் தனது அமைச்சரவையில் புதியதாக ஐந்து அமைச்சர்களை நியமித்துள்ளார். அவர்களில் இந்திய வம்சாவழியைச் சார்ந்த சென்னையில் பிறந்த பிரியங்கா ராதாகிருஷ்ணன் இடம் பெற்றுள்ளார். நியூஸிலாந்து வரலாற்றில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் மந்திரியாக நியமிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். சென்னையில் 1979 ஆம் ஆண்டு பிறந்த பிரியங்கா ராதாகிருஷ்ணன் சிங்கப்பூரில் படிப்பை முடித்துவிட்டு நியூசிலாந்தில் குடியேறி மேல் படிப்பை முடித்தவர். இவரது பூர்வீகம் கேரளா மாநிலம் கொச்சி பரவூர் ஆகும் இவரது தாத்தா மருத்துவராக பணியாற்றியவர். கடந்த 2011 ஆம் ஆண்டு எம்பியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரியங்கா ராதாகிருஷ்ணன் தற்போது அமைச்சராகியிருக்குறார். அவருக்கு சமூக மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புத் துறை ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி பிரியங்கா ராதாகிருஷ்ணன் தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் "இன்று நம்ப முடியாத ஒரு சிறப்பு நாளாக இருந்து வருகிறது. எங்கள் அரசாங்கத்தின் ஒரு பகுதியாக மாறுவதற்கான சலுகை உணர்வு உள்பட பல விஷயங்களை நான் உணர்கிறேன். எனக்கு வாழ்த்து கூறிய அனைவருக்கும் மிகப்பெரிய நன்றி. ஒரு மந்திரியாக நியமிக்கப்படுவது தாழ்மையுடன் இருக்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார் புதிய மந்திரிகள் நவம்பர் 6ஆம் தேதி பதவியேற்கிறார்கள்.



சென்னையில் பிறந்த இந்திய வம்சாவழி பிரியங்கா ராதாகிருஷ்ணன் அவர்களை வாழ்த்து வேம்.




**ஆவடி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அலுவலக வளாகத்தில் மறைந்த வேளாண்மைத் துறை அமைச்சர் இரா. துரைக்கண்ணு அவர்களுக்கு இரங்கல், அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ் வளர்ச்சி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல்த் துறை அமைச்சர் க.பாண்டிய ராஜன் மலர்தூவி வணங்கினார், அனைத்திந்திய தமிழ்ச்சங்கத் தலைவர் மற்றும் அம்மா தமிழ்ப்பீடம் நிறுவனர், சொல்லின் செல்வர் ஆவடிக்குமார் இரங்கல் உரகயாற்றினார். ஆவடி நகரக் கழகச் செயலாளர் ஆர்.சி.தீனதயாளன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.**



# அன்பினாலே ஆளவந்த அழகு!

உலகில் உள்ள ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பண்பு உண்டு. நீரின் பண்பு தண்மை. நெருப்பின் பண்பு வெம்மை. பாலின் பண்பு இனிமை. இவ்வாறே உயிருக்கும் ஒரு பண்பு உண்டு. அந்த உயிர்ப் பண்புதான் அன்பு.

"அன்பின் ஆளுமை குறைந்து போனால் மறைந்து போகும் மனித நேயம்"

அன்பு நெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும். இல்லையேல் அது எலும்பைத் தோல் போர்த்திய வெறும் உடலேயாகும் என்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். அன்பினாலே ஆளவந்த அழகுதான் மனிதம் என்றால் அது மிகையல்ல.

## உயிரின் அடிப்படை பண்பு:

இறைவனால் உயிர்க்குலத்திற்குக் கொடுக்கப் பட்ட வரமே அன்பு. இது உயிர்க்குலத்தின் வளர்ச்சிக்கு ஊற்றாகும். மானுடத்தின் அறிவும் யோகமும்கூட பயனற்றுப்போகின்றன. அன்புதான் உயிர்க் குலத்தின் பாதுகாப்புக்

கவசம். அன்பு இயற்கையாக அமைந்த ஒரு நியதி. மானுட சாதி அன்பு என்ற வரி சட்டத் திலிருந்து விலகிச் செல்வது தவறாகும்.

இன்று இயற்கை உலகம் விரிந்து பரந்துள்ள போதும் மனிதன் படைத்துள்ள கருவிகள் விரிந்த உலகை இணைக்கின்றன. ஆனால் மனித மனம் சுருங்கியுள்ளது. தன் வீடு, தன் நாடு, தன்மொழி, தன் மதம் என சுருங்கிப் போவதைத் தவிர்க்க வேண்டும். அன்பு ஒன்றே இறைவனை அடையும் வழி என்று நம் முன்னோர் வகுத்துப் பாதையில் நாம் நடைபோட வேண்டும்.

## அன்பும் அருளும் :

தொடர்புடையோரிடத்துத் தோன்றுவது அன்பு. ஆனால் அருள் என்னும் இரக்க உணர்வு எல்லோரிடத்தும் தோன்றுவது. எனினும் அருள் தோன்ற அன்பே காரணம்.

**"அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்**
**செல்வச் செவிலியால் உண்டு"**

(குரள் 757)

அன்பு பெற்றெடுத்த அருள் என்னும் குழந்தை என்பதால் அன்பின் குழவி என்று பேசப்படுகிறது. அன்புடையார் தமக்கென் ஒருபோதும் வாழ்வதில்லை. பிறர்க்கெனவே தியாக வாழ்வு வாழ்கின்றனர். அன்பின் வளர்ச்சி அருளாக கனிந்து தியாகமாக முதிர்வதைக் காணலாம். மனிதன் முதுகெலும்புள்ள வலிமையான படைப்பு. ஆனால் கடவுள் அன்பில்லாத மனிதனைக் கொல்லும்.

**என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை அறம்**

(குறள் 77)

மானுடத்திற்கு உண்மையான வலிமை அன்பி னால் மட்டுமே என்பதை உணர்ந்து எல்லா உயிர்களிடத்தும் அன்பு செய்தல் வேண்டும். இந்த உலகத்தினை இன்ப உலகமாக்கும் ஒரே வழி அன்பு மட்டுமேயாகும்.

## அன்பின் பெருமை::

மானிட வாழ்க்கை நலமாக இன்பமாக இயங்க அன்பு தேவை. அன்பு உள்ளங்களை இணைக்கும் ஆற்றலுடையது. கொடுக்கக் கொடுக்கக் குறையாமல் இந்த அன்பு வளரும் தன்மையுடையது.

**அன்பு சிவம் இரண்டு என்பார் அறிவிலார்**
**அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமானது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே**

(திருமந்திரம் 270)

அன்பே சிவம், அன்பே சிவமும் வேறானவை என்பவர்கள் ஒன்றும் அறியாதவர்கள் என்கிறார் திருமூலர்.

தன்னலமற்ற தன்மையே அன்பின் தூய்மை யினை எடுத்துக்காட்டும் உரைகல்லாகும். "தன்னலமற்ற தன்மையே கடவுள்" என்கிறார் விவேகானந்தர்..

> “ தூய அன்பினால் மட்டுமே உறவுகள் மேம்படும். தன்னலமற்ற தூய்மையான அன் பிற்கு ஒரு மாபெரும் சக்தி உண்டு. ”

## அன்பால் உறவுகள் மேம்படும்:

தூய அன்பினால் மட்டுமே உறவுகள் மேம்படும். தன்னலமற்ற தூய்மையான அன் பிற்கு ஒரு மாபெரும் சக்தி உண்டு. உரசல்களால் இன்று பல உறவுகள் சிதைந்து போயுள்ளன. தலைமுறை இடைவெளிகளால் பெற்றோர்கள் பிள்ளைகள் உறவு கூட தள்ளாடிக் கொண்டிருக்கிறது. அடி நாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் அமுதும் வைத்துக்கொண்டு உறவு களைப் பேணலாம் என்பது வெறும் கனவாகவே முடியும். எப்போதும் பிறர் துணையின்றி தனியாக எதையும் சாதிக்க முடியாது. சாதி மத இன பேதங்கள் பாராமல் அனைவரிடமும் பண்புடன் நடந்து கொள்ளும் உறவுகள் மேம்படும்.

சக மனிதர்களை நேசிப்பதால் மனிதம் மலரும். புத்தர், இயேசுபிரான், நபிபெருமான் என அனைவரின் போதனைகளும் அன்பையே அடிப்படையாகக் கொண்டவை. ஆழ்வார்களும் நாயன்மார்களும் கூட உபதேசித்தது அன்பு நெறிதான்.

**" அன்பில் சிறந்த தவமில்லை**
**அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு"**

என்கிறார் மகாகவி பாரதியார். எல்லோர் மீதும் எதிர்பார்ப்பில்லாமல் அன்பு செலுத்த வேண்டும் என்பதையே நம் இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. எனவே அன்பினாலே உலகை ஆள்வோம். "அன்பினாலே ஆளவந்த மனிதமே அழகு"!

# அனைத்திந்திய தமிழ்ச்சங்கம்

(பதிவு பெற்ற தன்னாட்சி அமைப்பு)

எண்.71, ஒன்பதாவது தெரு, காமராஜ் நகர்,

ஆவடி, சென்னை - 600071.

https:// www.anaithindiatamizhsangam.Com


# தமிழ் உணர்வெழுச்சி மாநாடு

## அறிவிப்பும் - அழைப்பும்

தமிழகத்தின் தலைநகரான சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, தமிழ்நாடு அரசின் "சொல்லின் செல்வர்" விருது பெற்ற தமிழறிஞர் ஆவடிக்குமார் அவர்களால் உருவாக்கப்பட்டது “அனைத்திந்திய தமிழ்ச்சங்கம்“ இந்திய சங்கங்கள் பதிவு சட்டப்படி பதிவு செய்யப்பட்டு, தன்னாட்சி அமைப்பாக தமிழ்ப்பணியாற்றி வருகிறது. இதன் இணை அமைப்புகளாக அம்மா தமிழ்ப்பீடம் (பதிவு அறநிலை) மற்றும் தமிழ்த்திறன் ஆய்வு நடுவம் ஆகிய அமைப்புகள் இயங்கி வருகின்றன.

கழகமுரசு பதிப்பகம் வழியாக நூல்கள் வெளியிடுவதோடு, கவிதை அரங்கேற்றம் செய்யப்படும் கவிதைகளைத் தொகுத்து தொகை நூல்களாக வெளியிடப்பட்டு வருகிறது.

கழகமுரசு தமிழிலக்கிய திங்களிதழ், அச்சு (Printed) மற்றும் மின்னிதழ் (E - Book) வடிவங்களில் வெளியிடப்படுகிறது.

தமிழகமெங்கும் தமிழ் விழாக்கள், கவிதை அரங்கேற்றம், கருத்தரங்கம், திறனாய்வு, பட்டிமன்றம், நூல் வெளியீடு, உரைவீச்சு போன்ற நிகழ்வுகளை நடத்தி தமிழ் வளப்பணி செய்து வருவதோடு, இணையம் வழியாக காணொளியில் தமிழ் நிகழ்வுகளை நடத்தி வருகிறது.

நடத்தப்படும் நிகழ்வுகளை மின் ஆவணமாக பாதுகாத்துப் பலருக்கும் பகிரும் நோக்கோடு, கழகமுரசு தமிழ்க்காட்சி ஊடகம் உருவாக்கப்பட்டு இணையம் (On Line)

வலையொளி (YouTube) முகநூல் (Facebook) புலனம் (WhatsApp) உள்ளிட்ட சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டு வருகிறது.

உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் சாதனைகளை அறிந்து ஆவணப்படுத்த உலகத்தமிழ் சாதனையாளர்கள் புத்தகம் (Tamizh Achievers World Book of Records) உருவாக்கி இந்தப் புத்தகத்தை உலகின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் பார்க்கும் வகையில் இணையம் ( https://www.tamizhachieversworldbookofrecords.com ) அமைக்கப்பட்டுள்ளது. இதன் அச்சுப் பிரதிகள் காலாண்டுக்கு ஒரு முறை நூலாக வெளிவர இருக்கிறது.

மொத்தத்தில்,..

- ✶ தமிழ் மொழியை வளப்படுத்தும் நோக்கில்...
- ✶ தமிழ் உணர்வாளர்களை ஒருங்கிணைக்கும் வகையில்...
- ✶ தமிழ்த்திறனாளர்களை ஆவணப்படுத்தும் முயற்சியில்...

முனைப்பாகப் பணி செய்துவரும் அனைத்திந்திய தமிழ்ச்சங்கம் தனது முதல் தேசிய மாநாடாக, தமிழ் உணர்வெழுச்சி மாநாடு வருகின்ற 2021 ஜனவரி மாதம் 22, 23, 24 ஆகிய நாட்களில் தமிழ்நாட்டில் நடத்த முனைந்துள்ளது.

## மாநாட்டு மலர்

அனைத்திந்திய தமிழ்ச்சங்கம் நடத்தும் தமிழ் உணர்வெழுச்சி மாநாட்டின் சிறப்பு நிகழ்வாக தமிழ் உணர்வெழுச்சி மாநாட்டு மலர் -2021 வெளிவர இருக்கிறது.

இம்மலர், உலகம் முழுவதிலும் உள்ள சிறந்த தமிழறிஞர்கள், உலகறிந்த தமிழாளுமைகளின் எழுச்சி உணர்வுகளோடு, 'தமிழிலக்கியங்களில் உணர்வெழுச்சி' பன்னாட்டுக் கருத்தரங்கு ஆய்வு கட்டுரைகளையும் தாங்கி உலகத்தரத்தில் சிறந்த நூலாக வெளிவரவிருக்கிறது.

## தமிழிலக்கியங்களில் உணர்வெழுச்சி பன்னாட்டுக் கருத்தரங்கு

மனித மனத்தின் உணர்வுகளை வெளிப்படுத்துதலை உணர்ச்சி என்கிறோம். அது தன்னுணர்ச்சி, பரிவுணர்ச்சி, கூட்டுணர்ச்சி என்று வேறுபடும் உணர்வு நிலைகளில் வடிக்கப்படும் மொழி உணர்வு, இன உணர்வு, பக்தி உணர்வு, காதல் உணர்வு, சோக உணர்வு, இன்ப உணர்வுகளின் போராட்ட எண்ணங்களின் எழுச்சியே இலக்கியமாகத் தகவமைக்கப்பட்டுள்ளன.

தமிழ் தோன்றிய காலம் தொட்டு, நாம் வாழும் காலம் வரை பூமியில் வாழ்ந்த தமிழ்க் குடிகளின் உணர்ச்சிகளின் எழுச்சிக் கூறுகளை ஆய்வுக்குட்படுத்தி பதிவு செய்யும் பெருநோக்கில், இம் மாநாட்டின் முத்தாய்ப்பாக, தமிழ்நாடு அரசின் **“உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்“** தரமணி, சென்னையுடன் இணைந்து, தமிழிலக்கியங்களில் உணர்வெழுச்சி என்னும் பொருண்மையில் பன்னாட்டுக்கருத்தரங்கு நிகழ்த்தத் திட்டமிட்டுள்ளோம்.

**இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கில் பங்கேற்க, ஆய்வாளர்கள், தமிழறிஞர் பெருமக்களிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப் படுகின்றன.**

"சொல்லின் செல்வர்" ஆவடிக்குமாரின்

# "நெஞ்சக் கதிர்களில்" உணர்ச்சி வெளிப்பாடு

**கவிதைக்கு இன்றியமையாத உணர்ச்சிகள் எட்டு வகைப்படும். அவை, சிரிப்பு, அழுகை, இழிவு, வியப்பு, பயம், வீரம், கோபம், மகிழ்ச்சி என்பதாகும்.**

இதைத் தொல்காப்பியர்

**"நகையே அழுகை, இளிவரல், மருட்கை அச்சம்**
**பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப" (தொல்)**

இந்த எட்டு வகை மெய்ப்பாடுகள் " சுவை இரசம் " என்ற பெயராலும் வழங்கப்படுகின்றன.

புதுக்கவிதை மணிக்கொடிப் பரம்பரை, எழுத்துப் பரம்பரை, வானம்பாடிப் பரம்பரை எனப் பல்வேறு காலக் கட்டத்தைச் சார்ந்த பல்வேறு கவிஞர்களால் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. அரசியலில் இருந்து கொண்டு தமிழுக்குத் தலை மகனாகத் தன் நெஞ்சக்கதிரில் நவ இரசங்களையும் தன்னுடைய கவிதைகளில் நடனமாடச் செய்திருக்கிறார். சொல்லின் செல்வர் ஆவடிக்குமார் அவர்கள்.

## நகை :

நகை என்பது சிரிப்பாகும். நகைச்சுவை உணர்வை விட காதல் புன்னகையைக் கவிதை களில் தவழ விட்டிருக்கிறார். புன்னகையைத் தொலைத்து விடாதீர்கள் எனக் கூறுகிறார்.

**" உன் உதட்டசைவில் உருவான**
**புன்னகைப் புறாக்கள்**
**என்னை அழுத்திக் கொண்டிருந்த**
**சோக ரேகைகளுக்கு**
**விடுதலை வழங்கிய**
**வித்தக முத்திரைகள்** எனக் கூறுகிறார்."

நகையினில் ஆபத்தானதும் உண்டு என்பதை மகாபாரதம் உணர்த்துகிறது. திரௌபதியின் சிரிப்பு ஒரு போருக்கே காரணமானது. ஆனால் ஆவடிக்குமார் அவர்களின் கவிதை நகை காதலை மெருகூட்டுகிறது.

**" நீ புன்னகை முத்துக்களை**
**புஷ்பிக்கும் போது தோன்றும்**
**மின்னல் ஒளியில்**
**என் கவிதைத் தேர்**
**வெள்ளக் காட்டாற்று**
**வேகத்தில் விரைகிறது! "**

உலகத்தில் பொன் நகையை விட புன்னகையே சிறந்தது என்பதை விளக்கியுள்ளார்.

ஒரு சிறு உதாரணத்தையும் கூற ஆசைப்படுகிறேன். " கழக முரசு" திறனாய்வு விழாவில் கண்ணதாசன் இலக்கிய அமைப்பு நிறுவனர். முனைவர் " இஸ்மாயில் " அவர்கள்

கோவை சீ. விஜயலட்சுமி,



“புதுக்கவிதை மணிக்கொடிப் பரம்பரை, எழுத்துப் பரம்பரை, வானம்பாடிப் பரம்பரை எனப் பல்வேறு காலக் கட்டத்தைச் சார்ந்த பல்வேறு கவிஞர்களால் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது.”

அண்ணனுடன் தம்பி இராமனுக்கு இலக்குவன்போல் உடன் இருப்பேன் என்றார்.

சொல்லின் செல்வரோ தம்பி நீ உடன் சென்று மனைவி குழந்தைகளை கவனி என்று கூறினார். ஊர்மிளையாக மனைவியை மாற்றிவிடாதே என்றார். நகைச்சுவை எதார்த்தமாக அவர் சொற்களில் தாண்டவமாடுகின்றது.

> ஒவ்வொரு மனிதனும் கண்ணீரின் ஆதிச் சுவையை உணர்ந்திருக்கிறான். காதல், கோபம், தாபம், மகிழ்ச்சி அனைத்து உணர்ச்சிகளையும் கண்ணீர் வெளிப்படுத்தி விடுகிறது.

### அழுகை :

சோகத்தில் தான் அழுகை பிறக்கும். அழுகை என்பது அல்லல் என்ற சொல்லையும் குறிக்கும். ஒவ்வொரு மனிதனும் கண்ணீரின் ஆதி சுவையை உணர்ந்திருக்கிறான். காதல், கோபம், தாபம், மகிழ்ச்சி அனைத்து உணர்ச்சிகளையும் கண்ணீர் வெளிப்படுத்தி விடுகிறது.

" அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் " என்றார் வள்ளுவர். ஆவடிக்குமார் ஐயாவோ அண்ணாவின் புகழ் உரைக்கையிலே

**" மடமை நிறைந்த மக்களுக்கும்**
**மனிதத் தன்மை தோன்றிடவே**
**கடமை கண்ணியத்தோடு**
**கட்டுப்பாட்டைப் புகன்றவரே !**

உழைக்கும் மக்களுக்கு உயிர்த் துணையானவரே

உனக்காகக் குடமாய் கண்ணீர் கொட்டுகிறோம் என்கிறார்.

**" கண்ணீர் கடலில் தவித்தாலும்**
**கவியே உந்தன் கொள்கைகளைத்**
**தண்ணீர் நடுவே தள்ளாமல்**
**தரணி முழுதும் உரைத்திடுவோம் "**

என்கிறார். இது பாசத்தினாலும் பற்றினாலும் வந்த கண்ணீர்த் துளிகள். அண்ணா மேல் ஐயா அவர்கள் கொண்டிருந்த மரியாதை இந்த வரிகளில் வெளிப்படுகிறது.

காதலை இப்படியும் சொல்லலாம் என்று கூறியுள்ளார்.

**" உன்னைப் பிரிந்த**
**கண்கள் பிரசவிக்கும்**
**கண்ணீர்க் குழந்தைகளை**
**யாரும் பார்க்கக் கூடாதல்லவா? "** என்று

**" கண்ணசைவில்**
**பிரசவிக்கும்**
**கண்ணீரை விட, பிரிவு**
**பிரசவிக்கும் சோகம்**

கவிஞனுக்குத் தேவையானது" என்கிறார்.

கவிதை வாழும் உலகோடு உறவுகொள்ளும் மகத்தான கலை கவிஞர்கள் மக்களின் சமூகப் பிரச்சினையாகட்டும். மனித உணர்வுப் பிரச்சினைகளாகட்டும் கண்ணீரின் மூலமும் வெளிப்படுத்துவார்கள் என்று சொல்லின் செல்வர் கூறுகிறார்.

### இளிவரல் :

இளிவரல் என்பது "இழிவு" எனப்படும் நம்முடைய இழிநிலையைக் கூறி நாம் அதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வருகிறோம் என்பதைக் கவிதை மூலம் வெளிப்படுத்துகிறார்.

**சுதந்திரம் தேடி**
**காமுகன் வீட்டுக்**
**கட்டிலில்**
**கடுந்தவம் புரியச்**
**சென்று விட்டார்களாம்**
**அதனால்....**
**நாங்கள் தவறுகளை**
**தட்டிக் கேட்கும்**
**உங்கள் தனித்தன்மையை**
**தாரை வார்க்காத**
**திண்மையை....**

உன் நிழலில்
யாரும் தவறு செய்ய மாட்டார்கள்
என்ற உண்மையைத் தெரிந்து கொண்டோம்.
எனவே,

**துயிலாமல்**
**துவளாமல்**
**துணிவோடு**
**துடிப்போடு**

**"நின் நிழல் தேடி நீள் பயணம்"** என்று குறிப்பிட்டுள்ளார். ஏமாந்து போனவர்கள் எவ்வளவு நாள் ஏமாறுவார்கள். புது வாழ்வின் வித்துக்கு விதை விதைத்திருக்கிறார்கள். மேலும்,

**உழைக்கும் ஏழை உயர்வுக்கு**
**உணவாய் நீயே வந்திடுவாய் !**
**ஏழைக்கும் தீயோர் வாழ்வுக்கு**

**தணலில் நீயும் மாறிடுவாய்!**

என்று ஏழைகள் ஏழை களாகவே இருக்கப் போவதில்லை உழைப்பால் ஓர்நாள் உயர்வார்கள் என்ற கருத்தையும் முன் வைத்துள்ளார் கவிதை மூலம். எதிர்ப்பு வரும் என்பதனால் பயந்து கொண்டு எத்தனாக, கோழையாக வாழ மாட்டேன் என்ற கவிஞரின் வார்த்தைகள் தன் னம்பிக்கையையும் தைரியத்தையும் கொடுக்கிறது.

## மருட்கை :

அற்புதமும் ஆச்சரியமும் கலந்த கலவை மருட்கை எனப்படும் இயற்கையைப் பல்வேறு விதமாக வருணிப்பதே. ஒரு ஆச்சரியம்தானே!

**“ வறட்சிப் பள்ளத் தாக்கினிலே**
**வாடிக் கிடந்த என் மனத்தில்**
**புரட்சிப் பாக்களை தந்தணைத்தே**
**புகழை சுமக்கச் செய்பவளே!**
**பள்ளத்தாக்கிலே....**
**புரட்சிப்பாக்கள்**

என்னே ஒரு கற்பனை கவிஞருக்கு! இயற்கையையே பேச வைத்து மனிதர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக உள்ளது.

**” மாடி மனை மணக்கின்ற**
**மலர்த்தோட்டம் பல சமைத்து”**

என்ன ஒரு முன்னோக்கு திட்டம். பத்து ஆண்டுகளுக்கு முன்பே மாடித்தோட்டம் அமைப்பது பற்றி தன் கவிதைகளில் கூறியுள்ளார். சில மனிதர்கள் தாம் இருந்த நிலையை விட சற்றுத் தாழ்ந்து போனால்கூட மனச்சோர்வு அடைகின்றனர். சொல்லின் செல்வர் காற்று, மழை, வெயில் அனைத்தையுமே ஆச்சரியம் கலந்த பார்வையுடன் நாம் விக்கித்துப் போகுமளவு தன் கவிதைகளில் எழுதியுள்ளார்.




## அச்சம் :

அச்சம் என்பது பயத்தைக் குறிக்கும். பயம் எப்போது யாருக்கு எப்படி வரும் என்று தெரியாத ஒன்று.

“ சொல் எதையாவது சொல்;, அதை சுவை படச் சொல் “ என்பது வானொலி ஊடகத்தின் அரிச்சுவடிப்பாடம். அதுபோல் எழுது, எதையாவது எழுது, அது பலருக்கும் பயன் படும்படி எழுது என்பது அடிப்படைப் பாடம்.

கவிதையானாலும் கட்டுரையானாலும் பொழுது போக்காகவோ, வேடிக்கையாகவோ, விளையாட்டாகவோ கருதாத ஒரு படைப்புக் கவிஞர் ஆவடிக்குமார் அவர்கள்,

**” திசைத்தவறி சென்று விட்ட கப்பல் தனில்**
**திடீரெனவே குதித்து ஆர்க்கும் கடலில் நீந்தி”**

ஒருவன் திசையும் திக்கும் தெரியாமல் நடுக்கடலில் நீந்தும்போது பெரும் அலைகள் ஆர்ப்பரிக்கும் நிலை கண்டு ஏற்படுவது அச்சமே. அச்சத்தைத் தவிர்க்கும் மருந்தையும் கூறியுள்ளார்.

**” முன்னோர் காட்டும் வீரம்**
**அசையாத சொல்லெழுத்து நெருப்பாய் மீறி**
**அயோக்கியரின் ஆட்டத்தை முடித்த தீரன் ”**

என தைரியத்தையும் கூறியுள்ளார்.

கொடுமைகளில் அவள் வாழ்க்கை கழிந்தபோதும்
கலங்கிடாது கவிதைத் தேர் ஏறி.
கொடுமைகளைப் பார்த்து அஞ்சாதீர்! என தீர்வையும் தன் கவிதைகளில் தந்துள்ள விதம் அற்புதம்.

**” நாட்டின் கொடுமைகளை அறுப்பதற்கு குமறுகின்ற**
**குவலயத்தோ ரையழைத்து, தூங்குகின்ற**
**கொடுவாளை எடடா என்ற எழுச்சிக் கீதம்**
**இசைத்திட்ட மானமறவன்! மொழிப் போரில்**
**தடுமாறித் தடம் புரண்டோர் நெஞ்சில் தங்கும்**
**தன்மானம் தமிழ்மானம் தந்த வீரன் எனப்**
**பாவேந்தரைப் போற்றிக் கூறியுள்ளார்.**

## பெருமிதம் :

பெருமிதம் என்பது வீரம் என்று

பொருள்படும். மனிதனின் உள்ளத்தில் தோன்றும் உன்னதப் பண்புகளில் ஒன்றுதான் வீரம்.

உடலீந்து புகழ் சுமக்கும்
மொழிப்போர் தீரர்
உறுதிக்கு தமிழ்வீர
வணக்கம் செய்வோம்!

என்ற கருத்தைப் படிப்பதன் மூலம் ஐயா அவர்கள் மொழிமேல் கொண்ட பற்று வெளிப்படுகிறது. தமிழை வணங்குவது கூட வீரத்துடன் வணங்க வேண்டும் என்கிறார்.

அக்காலத்தில்
போரில் ஏற்படும் விழிப்புண்
வீரத்தால் ஏற்பட்டது என்பர்.
மார்பில் வலியாகப் பெற்ற புண்
ஆனாலும் முதுகிலும் புண்
ஏற்பட்டால் இழிவு என்று கருதி
அந்த வீரர்கள் வடக்கிருந்து
உயிர் விடுவர்

அக்காலத்தில் போரில் ஏற்படும் விழுப்புண் வீரத்தால் ஏற்பட்டது என்பர். மார்பில் வலியாகப் பெற்ற புண் ஆனாலும் முதுகிலும் புண் ஏற்பட்டால் இழிவு என்று கருதி அந்த வீரர்கள் வடக்கிருந்து உயிர்விடுவர். நம் கவிஞரோ விழுப்புண் கண்டு சோர்ந்து போகாதீர்.

**" புவி மீது மனிதயினம்**
**பூத்திடும் நாள் வரையில்**
**புகழுருவாய் நீயிருப்பாய்**
**புல்லரை வீழ்த்துதற்கு! "**

என்று கயவர்களை வீழ்த்தும் வீரனாயிரு என்கிறார். நேத்தாஜியை வீரத்தின் ஜோதி என்கிறார்.

### வெகுளி :

வெகுளி என்பது சினத்தைக் குறிப்பதாகும். " ஆத்திச்சூடி" யில் ஔவையார் "ஆறுவது சினம்" என்று கூறியுள்ளார். சினத்தைக் கட்டுப்படுத்து வதாகும்.

**" செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அவ்விடத்துக் காக்கின் என் காவாக்கால் என் என்றார் வள்ளுவப் பெருந்தகை.**

மதுவை ஒழிக்க வேண்டும் என்று தன் கவிதையில் குறிப்பிடுகிறார்.

" மது குடித்து மாய்ந்திடாதே மனமே! நல்ல மதியிழந்து அலைந்திடாதே குணமே! என்றவர் பண்பற்று வாழும் மனிதர்கள் " பிணத்திற்கு" சமம் என்று கூறுகிறார்.

வறுமையில் வாடுவோரைக் கண்டு சினம் கொண்டு அவர்களுக்கு நம்பிக்கை ஒளி ஏற்றுகிறார்.

**" ஒளிபட்டு விரிந்திருக்கும்**
**ஓலைக் குடிசையில்**
**இளைப்பாறும் வறுமையின்**

விளையாட்டை தாங்கிக் கொண்டிருக் கிறோம்

என்றும்

**நம்பிக்கைகளே....**
**உங்களை மட்டுமே**
**நம்புகின்றோம்**
**வழிபடுகின்றோம்**

எனவும் சினம் பற்றி கூறியுள்ளார்.

### உவகை :

உவகை என்று மகிழ்ச்சி யெனப்படும் செல்வம், மிகுந்த அறிவு, காமப்புணர்வு, விளையாட்டு என்பவைகளின் அடிப்படையில் தோன்றுவதுதான் மகிழ்ச்சி. நம் மொழியில்லாத வேறு பகுதியில் நாம் நிற்கும்பொழுது நம் மொழிபேசும் மக்களைக் காணும்பொழுது ஏற்படுகிற உவகை வார்த்தைகளில் சொல்ல முடியாது.

**" இன்பம் எல்லோர்க்கும் பொதுவாகட்டும் "**
**துன்பம் துயரம் துடித்தோடட்டும்**

என்கிறார்.

**" நீ விடும்**
**உயிர் மூச்சே....**
**மணம் வீசும்**
**தென்றல் காற்றோ"**
**" மின்னல் உன்**
**கண்ணசைவோ** என காதலை

வெளிப்படுத்துகிறார். அன்றோ " அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் " என்றும் கண்ணோடு கண் நோக்கின் வாய்ச்சொற்கள் பயனில்லாமல் போகும் என்றார் வள்ளுவர்.

ஆனால்.... ஆவடிக்குமார் அவர்களோ.... ஒரே வரியில்....

அவள்....

**பார்வை மின்னல் வெட்டு!**
**எரி நெருப்பு அவள்**
**நெற்றிப் பொட்டு!**

என வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு நவரசங்களையும் தன் " நெஞ்சக் கதிர்களில். " சுவைபடக் கூறியுள்ளார்.

# வானொலி




ஒலிச்சித்திரங்கள்,
ஒலித்துக் கொண்டிருக்கின்றன..
உன் நினைவலைகளில் நான்!
ம.சக்திவேலாயுதம், திருநெல்வேலி

.........................................................................

"நேயர் விருப்பமாய்"பாடலைக் கேட்டேன்
இலவசமாய் கிடைத்தது
இதமாய் நினைவுகள்.
ஜெசி சந்திரா, கோவை.

..................................................

மாலை நேரம் வந்தால்
மந்தை வெளியில்
மக்களை கூட்டும்
மனிதநேய கிராம வானொலி பெட்டி
வி மண்ணாங்கட்டி, புதுவை

......................................................

தொடர்பு எல்லையை விட்டு
வெளியே சென்ற...
தொலை தொடர்பு சாதனம்.
மரு.ப.ஆதம் சேக் அலி.களக்காடு

............................................................

நேரம் பாரா உழைப்பாளிக்கும்
ஆயிரம் உணர்வு மனதிற்கும்
மார்கோனியின்
மனமருந்து.
வே. சண்முகதேவி, கோவை

....................................................

கண்களுக்குத் தொல்லையில்லை
காதுவழி கானம் வந்து
மெய்மறக்கச் செய்ததம்மா
வே உலகம்மாள்,கோவை

...............................................

அன்றிருந்தது அது !
இன்றிருக்கும் இடம் தெரியவில்லை ?
வானொலியும் இதயத்தில் மகிழ்ச்சியும்,,,,,
மு குமாரசாமி,திருநெல்வேலி

......................................................

கேளிக்கை ஆபாசம் ஒளியினிலே;
ஒழித்திட மீண்டும் கேட்டிடு வானொலியே!
இல.ஜெயலட்சுமி ,கோவை.

....................................................

ஆச்சரியத்தின் மாயப் பெட்டி .
எங்கோ இயங்க நம்மை நாடி வரும்
வான் வழியில் அலைவரிசை
தஞ்சை தாசன் ,சென்னை 600 091

.........................................................................

காலம் கடந்தாலும்
உன்னை மறக்கவில்லை
ஆகாசவாணி.
வ.சு.கலைவாணி, நெய்வேலி

........................................................

மார்கோனி யின்
மடிக் குழந்தை ! ஒரு
நூற்றாண்டுக் கதாநாயகன் நீ !!
முகம்மது ஈஸா,திருநெல்வேலி

..........................................................

அகவை ஆறோ அறுபதோ
தொல்லை இல்லா சொந்தம்
தோழனாய் இணைந்த பந்தம் !!
சு.கலையரசி.கோவை.

........................................

பெருஞ்செல்வந்தனின்
பூர்வீக வீட்டைப்போல்
தகவல் தொடர்பின்
வளர்ச்சியில்
உனக்கான,இடம்
மங்கைமுருகன், உடுமலை

...................

நீயும் மாட்டிக் கொண்டாய்
அடிமையாக அடைந்து
கைப்பேசியில்....
கோ.கலைமகள் காயத்ரி.
கள்ளக்குறிச்சி

..........................................

**மு**ன்னுரை: நாம் காணுகின்ற சாதாரணமான ஊர்களில் பல சில ஆண்டுகளுக்கு முன்னர் பெருமையும், புகழும் கொண்டிருந்தன அங்குத் தேரும், புரவியும், யானையும், பல்லக்கும், திருவிழாவும், மக்கள்கூட்டமும் நிறைந்தன என்றால் அதைநம்பிட முடியாது அப்படி இருந்த ஊர்தான் தொட்டிக் கலை.

தொட்டிக்கலை: இதென்ன விசித்திரிமான பெயராக உள்ளதே, எனநம்மில் பலர் வியப்படையக் கூடும். ஆனால் இது காரணப் பெயர், மாடு நீர் அருந்தும் தொட்டிகள் இருந்தன. அந்த இடத்திலே கலையும் கல்வியுமாக வளர்ந்தன.

தெருவா வீதியா: தெரு என்பது வண்டிகள் செல்லும் வழிஎன்றும், சந்து என்பது இன்னும் குறுகலானது என்றும், பாதை என்பது ஒற்றையடிப்பாதையாகவும் வீதிஎன்பது அகன்ற தேர்செல்லும் அளவுக்கு அகன்ற நேர்கொண்டதாகவும் நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர். தொட்டிக்கலை வீதிகளை உடையன. திருவிழா கண்டிருக்கிறது. இறைத் திரு மூர்த்தங்கள்வீதிஉலா சென்றுள்ளன என்பதனை இங்குள்ள கோயில்களின் முன்புறம் அகன்றஇடம் உள்ளமையால் மக்கள்கூட்டமாக இருக்கவும், அலங்காரம் செய்யவும் இந்த இடங்கள் பயன்பட்டிருக்க வேண்டும்.

நுழைவுவாயில்: அழகானசிறிய கோபுரம், கிழக்கு நோக்கியது கோயிலின் இடது புறம் சிறிய குளமும் வலதுபுறம் சாமியார் மடமும் உள்ளன. கோபுரத்து முன்புறம் முன் சொன்னது போலவிசாலமாக இடம் உள்ளது.

**கோபுர தனிசனம்:** கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்பர். கோபுரத்தைக் கண்கள்கண்ட போது உள்ளிருந்து ஓங்காரஓசையுடன் அலாதிப்பிரியத்துடன் ஓர் அமைதிக்கு வழிகிடைப்பதை அனுபவித்து உணர்ந்தேன்.

கோபுரத்தின் கீழே பெரியநிலைப்படிகள் கருங்கற்களால் பதிக்கப்பட்டுள்ளன. இடது பக்கம் ஒரு ஜடாமுடியுடன் ஒருவருடைய புடைப்புச் சிற்பம் தென்படுகிறது ஒரு வேளை



இந்தத் தொட்டிக் கலையை மகிமைப்படுத்திய மாதவச் சிவஞான முனிவராக இருக்கலாம்.

**கொடி மரமும் பலிபீடமும்:** வழக்கமாக எல்லாக்கோயில்களிலும் கொடிமரமும் பலிபீடமும் இருக்கும். இதில் சைவம், வைணவம் என்கிற வேறுபாடு இல்லை.

இந்தக் கோயிலின் உள்ளே நுழைகிற நான் என் மனம், மொழி, மெய் என்கிற மூன்றையும் ஒருங்குபடுத்து

# சீர்மிகு தொட்டிக் கலை



வேன். இறை நேர்த்தியன்றி வேறொன்றையும் எண்ணமாட்டேன். இந்த நொடி முதல் என்னுடைய உள்ளத்தில் இறையே நீ இருத்தல் வேண்டும். வேறுசிந்தனை தோன்றுமாயின் அவற்றை நீ அழித்தல் வேண்டும் என பலிபீடத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு, நந்தியெம்பெருமானிடம் அனுமதி பெற்று உள்ளே சென்றேன்.

**சிதம்பரேசுவரமும் சிவகாமியம்மையும்:** தில்லையில் உள்ள பெருமான் எங்கும் உள்ளான் என எண்ணி வழிபட்டு, இடப்பக்கமாகச் சென்றால் நால்வர், கணபதி, சுப்பிரமணியர், சண்டீசர், கொற்றவை, நடதாசப் பெருமான் என உள்ளனர்.

நடராசன் கூத்தப் பெருமான் பெரிய மூர்த்தம் கண்ணிறைக் காட்சி அழகானது பலப்பல அழகியலோடு நாம் காண இயலும் அருகிலே சிவகாமி சுந்தரி.

மீண்டும் ஒரு முறை திருவாசகம் கொண்ட பெருமானை, தில்லையுள் கூத்தனை வழிபட்டு வெளிப்பிரகாரம் வந்தால் ஆகா அருமையானது. விசாலமானது பலஆயிரம் அமரஇடம் வருவது.

தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் நடனமாடி அருள் செய்தமையால் பெருமான் சிதம்பரேசுவரர் எனக் கொண்டாடப்படுகிறார்.

சோமேசர் முதுமொழிவெண்பா



சிவஞான முனிவர்தம் ஆழ்ந்த புலமையினால் திருக்குறளின் 133 அதிகாரங்களுக்கும் 133 நேரிசை வெண்பாக்களைப் பாடி உள்ளார். முன்னிரண்டு அழகுளில் திருக்குறளின் ஆழ்ந்த கருத்து புலப்படுமாறும், இறுதி இரண்டு அடிகள் திருக்குறளை அப்படியே எடுத்தாண்டுள்ளார்.

(எடு)

நேய புகழ்த்தனையார் நீராட்டுங் கைதளர்ந் துன் தூயமுடி மேல் வீழ்ந்தார் சோமேசர் ஆயுங்கால் **தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம் வானம் வழங்கா தெனின் (குறள் வான் சிறப்பு)**

ஒவ்வொரு பாடலிலும் சோமேசா என்று விளித்துப்பாடி இருக்கிறார்.

**தெற்குப் பெருவீதி:** (தென்முகக் கடவுள்)

தெட்சணாமூர்த்திக்குத் தனிசந்நிதி உள்ளது. அழகான கோயில் என்பதை விடவும், அழகானவடிவமைப்பில் உள்ளார். பெரிய கோயில்களில் கூட கருவறைக்குத் தென் புறத்தே தென்முகக் கடவுள் ஒன்டிக் குடித்தனம்தான் செய்வார். ஆனால் தனிச்சந்நிதியென்றால் வழிபட்டோரும், வந்து சென்றோரும், நன்மை பெற்றோரும் மிகஅதிக அளவில் இருந்திருப்பர் என்பதை என்னால் உணர முடிந்தது.

**அங்காள பரமேசுவரிதிருக்கோயில்:** தென் முகக் கடவுளின் திருக்கோயிலின் சில அடி தூரத்திலேயே அங்காள பரமேசுவரி கோயில் உள்ளது.

இவளின் முன்புறம் சிம்மம் வீற்றிருக்க செவ் வாடை கட்டி, சூலமேந்திஅமர்ந்த கோலத்தில் உள்ளார்.

இதன் எதிர்ப்புறம் பூமிதித்தலுக்காக 20அடி நீளமும், 8 அடி அகலமுடைய மேடை உள்ளது.

**தலவிருட்சம், நாகேசுவரனும்:** மிகப்பெரிய மரம் ஒன்றுகாய்ந்து போய் உள்ளது. அதை வன்னிமரம் என்கிறார்கள். அதற்கு அருகில் தல விருட்சம் வில்வம், மூவிலையைக் கொண்டது. அதைக் கண்களில் ஒற்றி நேர்த்தி செய்து கொண்டு பிரகாரம் வந்தால் பெரிய புண்ணியதலத்துக்குள் சென்று இடிபடாமல் வெளியேறிய நிறைவு கிடைக்கிறது. தமிழகத்தில் உள்ள எல்லாக் கோயில்களுமே ஏதோ ஒரு விதப்பெருமை கொண்டதுதான். அந்தவகையில் இந்தத் தொட்டிக்கலையும் பெருமை கொண்டதுதான்.

**பாடல்பெற்றதலம்:** ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரால் பாடப் பெற்றால்தான் பாடல் பெற்ற தலம் எனக் கூறிவருகிறோம். அது பழைமைக்கானகணக்கு மூத்தது என்பதற்காகவே அப்படி ஆனால் காலம் தோறும் தோன்றுகிற சான்றோர்கள் தாம் வாழும் பதியில் உள்ள இறைவனைச் சேவித்து, வழிபாடியற்றி, பாடல் புனைந்து, போற்றி உள்ளனர். எனவே இவையும் பாடல் பெற்றதலமாகப் போற்றுதல் நம் மரபினுக்கு உகந்ததாகும்.

**சிவஞான முனிவர் என்ற குல குரு:** திருவாவடுதுறை ஆதினத்துக் குலகுரு சிவஞான முனிவர் இவரைமாதவச் சிவஞான முனிவர் என சைவ உலகம் கொண்டாடுகிறது. இவர் திருநெல்வேலியில் பிறந்தவர். இவர்க்குப் பன்னிரண்டு மாணவர்கள் இவரில் கலசைச் சுப்பிர மணியரும், கச்சியப்பசிவாச் சாரியாரும் அடங்குவர். இவரின் சீடர்கள் பல நூல்களை எழுதி வரலாறாக உள்ளனர்.

**சிவஞான முனிவர் நூல்கள்:** மாதவச் சிவஞான முனிவர் தமிழிலே பாஷ்யம் இல்லாத குறையைப் போக்கச் 'சிவஞான போதம்' சாத்திர நூலுக்கு 'பாஷ்யம்' (பேருரை) எழுதிஉள்ளார்.

**ஆசிரியர் மாணவர் உறவு:** நல்லாசிரியர்களிடம் பயின்ற நன் மாணாக்கர் பலர் தம் வாழ்வுக் கல்விஒளியைத் தந்த ஆசிரியரை மறக்கவே மாட்டார்கள். அக்காலத்தில் ஆசிரியர் மாணாக்கர் உறவு மிகவும் மதிக்கப்படுவதாகவும், போற்றி ஒழுகப்படுவதாகவும் இருந்தது பெரும்பாலும் ஆசிரியர் வீட்டிலேயே சென்றுதங்கிஆசிரியர்க்குப் பணிவிடை செய்து, நோன்புபோலக் காத்திருந்து கற்றுச் சிறந்தனர் என்பது தமிழகத்தின் முந்தையகாலக்கல்விநிலை ஆகும்.

சிவஞான முனிவர் நூல்கள்

கலசைச் சிதம்பரேசுவரரின் புகழ்பாடும் கலசைச்

சிதம்பரேசுவரர் பத்தந்தாதியும் இங்குள்ள விநாயகம் செழுங்கழுநீர் விநாயகருக்குச் செழுங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழும் பாடி உள்ளார்.

**தொட்டிக்கலைச் சுப்பிரமணியர் இயற்றிய நூல்கள்:** கலசைக்கோவை, சிலேடை வெண்பா, சந்நிதிமுறை, பஞ்ச ரத்தினம், பழனி குழந்தை வேலர் பஞ்சர தினமாலை, குற்றாலகலசை உலா, குற்றாலம் சித்திரசனம் திரு விருத்தம், ஆவடுதுறைக் கோவை, தன் குரு நாதன் மீது பஞ்ச ரத்னமாலை, ஆனந்த கவிதை, ஆயலூர் முருகன் பிள்ளைத் தமிழ், பழனிபதிற்றுப்பத்தந்தாதி, வடதிரு முல்லை வாயில் கொடியிடைநாயகிஅந்தாதி முதலிய நூல்களை இயற்றினார் பிரபந்தங்கள் பாடி உள்ளார்.

வடமொழிநூல்கள் சிலவற்றை மொழி பெயர்த்து உள்ளார். இவருக்கு மதுரகவிஎன் னும் பெயரும் உண்டு.

**செழுங்கழுநீர் விநாயகர்:** தொட்டிக் கலையின் மேலவீதியில் செழுங்கழுநீர் விநாயகர் உள்ளார். இவரின் மீது பிள்ளைத் தமிழ் ஒன்று பாடப் பெற்றுள்ளது. பாடல்களில் பிள்ளைத் தமிழ் கடினமானது ஆகும் என்பர் அறிஞர். 10 பருவங்களை உடையது. இது ஆண்பால் பிள்ளைத் தமிழ், பெண்பால் பிள்ளைத் தமிழ் எனப்படுகிறது.

**உருக்கோவை யங்கொள் கலசைத் தியாகரை ஓர்ந்துரைக்கும்.**

**திருக்கோவை யார் முழு துந்துறை செய்யத் திகழ் தருமால்**

**மருக்கோவை வாயுமை மைந்தன் கலசையுள்வாரிசனைந்**

**தருக்கோவை யாழியன் சூழ்செய்கழுநீர்த் தனிக் கயமே**

என்பது தொடக்கம்.

சிவஞான யோகிகள் அருளிய பிரபந்தத்திரட்டு

பருமாலை நீரைவீதித் திருத் தொட்டிக் கலைபதிற்றும் பத்தர் தாதித்

திருமாலை யெமையாளும் சிவபெருமான் திருவடியில் சேர்க்க நல்கும்

பெருமாலைக் கயம்கனைக் குடற்குழும்பத் துகைத் துருட்டிப் புரட்டி நாயேன்

கருமாலைத் துரந்தனே



எழுந்தருளும் செழுங்கழு நீர்க் களபந் தானே

**கலசைப்பதிற்றுப்பந்தாதி:** இந்நூலில் பத்துப் பத்துப் பாடலுக்கு ஒரு சந்தமாக 10 விதமான யாப்பு முறையைப் பயன்படுத்தி அழகான நூல் தந்துள்ளார் ஆசிரியர் அந்தாதி முதல் பாடலின் ஈற்றடியும் அடுத்தப்பாடலில் முதலடியும் ஒரே சொல்லால் ஆக்கப்படுவது.

**திருமாலன் திருக்கோயில்:** மேற்குவீதியில் திருமால் வாசம் செய்யும் கேசவப் பெருமாள் கோயில் உள்ளது மொட்டைக் கோபுரம் தான்.

இப்பகுதியில் நிறைந்த ஆநிரையும் தொட்டில்களும், மெய்ப்பாரும், காப்பாரும், கறப்பாரும், பகிர்வாரும் இருந்திருக்க வேண்டும்.

**மக்கள் நிறைவுடைமை:** பசியற்ற நிலையில் மக்கள் இறை வழிபாட்டை யும், பக்தியையும் வளர்த் துள்ளனர். சான்றோரும் மக்களுக்கு நன்னெறியூட்டி வாழ்த்தி உள்ளனர்.

ஆயலூர்: தொட்டிக் கலைக்கு அடுத்த ஊர் ஆயலூர் இங்குள்ள முருகன் மீதுஆயலூர் முருகன் பிள்ளைத் தமிழ் பாடப் பெற்றுள்ளது.

**கோயிறுக்கு வழி:-** சென்னை திருவள்ளூர், அரக்கோணம் இரயில், செவ்வாப் பேட்டை ரோடு என்னு மிடத்தில் இறங்கி ஆட்டோவில் செல்லலாம் 4கி.மீ தூரம் சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலையில் செவ்வாப்பேட்டை பேருந்து நிலையத்தில் இறங்கிவடக்கு நோக்கி 4 கி.மீதூரம்

நன்றி உ.வே.சா அவர்களுக்கு அவரில்லையேல் நூல்கள் வெளிவந்திருக்காது.

**முடிவுரை:** வாய்ப்புள்ளோர் சென்று வருக இது ஒரு சுகமான அனுபவம் இயற்கை எழில் நிறைந்த மண். சான்றோர்கள்கண்களிப்பக் கண்டுணர்ந்த சிதம்பரதேசர் சிவகாமிஅம்மை.

சிவ. சிவ. சிவார்ப்பணம்

(குறிப்பு) இந்தக்கோயில் மிக அருமையாகப் பராமரிக்கப்படுகிறது. இந்து சமய அறநிலையத் துறையால் நிருவகிக்கக் கூடிய இத்திருக்கோயில்கள் மிகச்சுத்தமாக, மிகஅழகாக பராமரித்து உள்ளன.

இத்திருக்கோயிலில் இறைத் திருப் பணி செய்பவர் மிக அன்புடன் வழிநடத்தினார்.

இத்திருக்கோயிலுக்கு ஏராள மான பொருள் செலவு செய்து தம் நிறைவுப் பணியைச் செய்து கொண்டிருக்கக் கூடிய சென்னைத் துறைமுக ஒப்பந்தக்காரர் திரு.R.S. சுப்பிரமணியம் அவர்களுக்கு.


உலகத் தமிழ் மக்களின்
உணர்வுகளும்...
உள்ளக் கிடக்கைகளும்...
உங்களோடு....
எல்லைகளற்ற...
பரந்தப் பெரு வெளியில்....
கழக முரசு
தமிழ்க் காட்சி ஊடகம்
நினைவாய்.... நிழலாய்....
நிஜமாய்....
உங்கள் கைபேசிக்குள்...
தமிழ்ச்சங்கமம்...!
www.kazhagamurasu.in
www.anaithindiatamizhsangam.com
Call: 99411 74777 WhatsApp: 99412 74777
E-mail: kazhakamurasu@gmail.com
https://www.youtube.com/கழகமுரசு
https://www.facebook.com/kazhagamurasu